# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN

## பரிசுத்த ஆவியினால் நிறைந்திருங்கள்

எபேசியர் 5:18

## BE FILLED WITH THE *Holy Spirit*




THE THAMIZH PRADHESA ASSEMBLIES OF GOD

July - August 2026
Volume : 66

ஆண்டு சந்தா ₹120/-
Issue : 4

## மாணவர் சீஷத்துவ முகாம்கள் – 2026




## AGNM தலைவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் குடும்ப முகாம், குன்னூர்










ஆசிரியரிடமிருந்து........!

## பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்க்கையின் அடையாளங்கள் (எபேசியர் 5:18-6:20)



கிறிஸ்துவுக்குள் அன்பான வாசகர்கள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் இனிய வாழ்த்துக்கள்!

கிறிஸ்தவ வாழ்க்கை மனித பலத்தாலும், அறிவாலும், முயற்சியாலும் மட்டும் வாழப்பட வேண்டியதல்ல. மனித ஞானத்தையும் திறமையையும் மட்டுமே நம்பி வாழ்க்கையை நடத்த தேவன் ஒருபோதும் விசுவாசிகளை அழைக்கவில்லை. அதனால்தான் எபேசியர் 5:18-ல் அப்போஸ்தலனாகிய பவுல், ‘ஆவியினால் நிறைந்திருங்கள்‘ என்று கட்டளையிடுகிறார். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல் என்பது, வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு, வல்லமையூட்டப்பட்டு வாழ்வதைக் குறிக்கிறது. மதுவின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஒருவனின் நடத்தை மாறுவது போல, பரிசுத்த ஆவியின் கட்டுப்பாட்டில் இருக்கும் விசுவாசியின் பேச்சு, சிந்தனை, நடத்தை, வாழ்க்கை முறை அனைத்தும் மாறும். ஆவியினால் நிரம்பிய வாழ்க்கை மறைந்திருப்பதில்லை; அது வெளிப்படையான அடையாளங்களை உண்டாக்கும். எபேசியர் 5 மற்றும் 6-ஆம் அதிகாரங்களில் பவுல், பரிசுத்த ஆவியால் நடத்தப்படும் விசுவாசியின் வாழ்க்கையில் காணப்படும் ஐந்து முக்கிய அடையாளங்களை விளக்குகிறார்.

### ஆராதனை வாழ்க்கை
### WORSHIP LIFE

முதலாவது அடையாளம் ஆராதனையால் நிரம்பிய வாழ்க்கை. எபேசியர் 5:19-20-ல், ஆவியினால் நிரம்பியவர்கள் சங்கீதங்களாலும், கீர்த்தனைகளாலும், ஆவிக்குரிய பாடல்களாலும் கர்த்தரைப் பாடி ஸ்தோத்தரிப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. உண்மையான ஆராதனை என்பது சபையில் பாடல்கள் பாடுவதால் மட்டும் முடிவதல்ல; அது தேவனால் நிரம்பிய இருதயத்தின் வெளிப்பாடு. பரிசுத்த ஆவியால் நிரம்பிய கிறிஸ்தவர்கள் எல்லா சூழ்நிலைகளிலும் நன்றி சொல்லவும், தேவனைத் துதிக்கவும் கற்றுக்கொள்கிறார்கள். முறுமுறுத்தல், குறை கூறுதல், எதிர்மறை மனப்பான்மை ஆகியவை மெதுவாக மறைந்து விடுகின்றன. இயேசு, யோவான் 4:24-ல் ‘ஆவியிலும் உண்மையிலும் தேவனை ஆராதிக்க வேண்டும்’ என்று கூறினார். இதன் பொருள், ஆராதனை வெளிப்புற செயலாக மட்டுமல்ல; அது உள்ளார்ந்த உண்மையான அனுபவமாக இருக்க வேண்டும் என்பதாகும். ஆவியினால் நிரம்பிய விசுவாசிகள் இயல்பாகவே ஜெபம், துதி, ஸ்தோத்திரம், வேதவாசிப்பு மற்றும் தேவனோடு ஐக்கியம் ஆகியவற்றில் மகிழ்ச்சி உடையவர்களாய் இருப்பார்கள். கஷ்டங்களின் மத்தியிலும் அவர்கள் கர்த்தரில் சந்தோஷமாயிருக்க கற்றுக்கொள்கிறார்கள். ஏனெனில் பரிசுத்த ஆவியானவர் தரும் சந்தோஷம் உலக சோதனைகளை விட பெரியது.

## குடும்ப வாழ்க்கை
## WEDDED LIFE

இரண்டாவது அடையாளம் தேவபக்தியுள்ள குடும்ப வாழ்க்கை. பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல் குறித்து கூறிய உடனேயே, பவுல் எபேசியர் 5:22-25-ல் குடும்ப உறவுகளைப் பற்றி பேசுகிறார். இதன் மூலம் உண்மையான ஆவிக்குரிய வாழ்க்கை முதலில் வீட்டிலேயே வெளிப்பட வேண்டும் என்பதை அறிகிறோம். ஆவியினால் நிரம்பிய மனைவி தன் கணவருக்கு கர்த்தருக்குக் கீழ்ப்படிவதுபோல் கீழ்படிந்து நடப்பாள். அதேபோல், ஆவியினால் நிரம்பிய கணவன் கிறிஸ்து சபையை நேசித்ததுபோல் தன் மனைவியை தியாக அன்போடு நேசிப்பான். மனித அன்பு சுயநலமும், பொறுமையின்மையும் கொண்டதாக இருக்கலாம்; ஆனால் பரிசுத்த ஆவி தரும் அன்பு மன்னிக்கும் அன்பு மற்றும் பொறுமையான, மென்மையான, நிலையான அன்பாக இருக்கும். பரிசுத்த ஆவியின் உதவியின்றி குடும்ப பொறுப்புகளை நடத்த முயல்வதாலேயே இன்று பல குடும்பங்கள் சமாதானத்தை இழக்கின்றன. பெருமை, கோபம், சுயநலம், மன்னிக்காத மனம் ஆகியவை குடும்ப அமைதியை அழிக்கின்றன. ஆனால் கணவன்-மனைவி இருவரும் பரிசுத்த ஆவியின் கட்டுப்பாட்டில் வாழும்போது, வீட்டின் சூழ்நிலை மாறுகிறது. ஜெபம் இயல்பாகிறது; அன்பு பெருகுகிறது; மன்னிப்பு எளிதாகிறது; கிறிஸ்து குடும்பத்தின் மையமாகிறார். எபேசியர் 6:1-4-ல் பிள்ளைகளும் இதில் சேர்க்கப்படுகிறார்கள். பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்படிகிறார்கள். பெற்றோர்களும் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற போதனைகளில் வளர்க்கிறார்கள். ஆவியினால் நிரம்பிய குடும்பம் உலகத்திற்கு தேவனுடைய கிருபையின் சாட்சியாக மாறுகிறது.

## வேலை வாழ்க்கை
## WORK LIFE

மூன்றாவது அடையாளம் வேலை மற்றும் பொறுப்புகளில் உண்மையாய் இருப்பது. எபேசியர் 6:5-9ல், நாம் செய்யும் வேலைகளை மனிதர்களுக்காக அல்ல, கர்த்தருக்காகச் செய்வதுபோல் செய்ய வேண்டும் என்று பவுல் கூறுகிறார். ஆவியினால் நிரம்பிய விசுவாசி, வேலை என்பது சம்பாதிக்கும் வழி மட்டுமல்ல, தேவனை மகிமைப்படுத்தும் இடமும் ஆகும் என்பதை உணர்கிறார். ஆகையால் அவர் நேர்மையானவர், நேர்த்தியானவர், கடின உழைப்பாளி, நம்பிக்கைக்குரியவர், பொறுப்புள்ளவர் என்ற சாட்சியை வேலை செய்யும் இடத்தில் உடையவராக இருப்பார். சிலர் சபையில் மிகவும் ஆவிக்குரியவர்களாகத் தோன்றினாலும், வேலை செய்யும் இடத்தில் சோம்பேறிகளாகவும், பொறுப்பில்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். இது அவர்களின் சாட்சியை பலவீனப்படுத்துகிறது. பரிசுத்த ஆவியால் நிரம்பியவர்கள் எங்கு வேலை செய்தாலும் அங்கே ஒளியாக பிரகாசிப்பார்கள். அவர்களுடைய நேர்மை, தாழ்மை, ஒழுக்கம், உழைப்பு ஆகியவற்றின் மூலம் கிறிஸ்துவின் சுபாவம் வெளிப்படும். உலகம், ஏமாற்றுதல் மற்றும் பொறுப்பின்மையால் நிரம்பியிருக்கும்போது, ஆவியினால் நிரம்பிய தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கையால் வல்லமையான சாட்சிகளாக இருப்பார்கள். தங்கள் வேலை ஸ்தலத்தில் உப்பாகவும், ஒளியாகவும் இருப்பார்கள்!.

## ஆவிக்குரிய யுத்த வாழ்க்கை
## WARFARE LIFE

நான்காவது அடையாளம் ஆவிக்குரிய போராட்டத்தில் ஜெயமுள்ள வாழ்க்கை. எபேசியர் 6:10-18-ல் கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு போராட்டம் என்று பவுல் நினைவூட்டுகிறார். சாத்தான் விசுவாசியின் விசுவாசம், குடும்பம், பரிசுத்தம்,

சந்தோஷம், சமாதானம், சாட்சி ஆகியவற்றை தாக்குகிறான். மனித பலத்தால் இந்தப் யுத்தத்தில் வெற்றி பெற முடியாது. பரிசுத்த ஆவியினால் நிரம்பியவர்களே சாத்தானின் தாக்குதல்களுக்கு எதிராக நிலைத்து நிற்க முடியும். சத்தியம், நீதி, விசுவாசம், இரட்சிப்பு, வேத வசனம், ஜெபம் ஆகியவை தேவன் கொடுத்த ஆவிக்குரிய ஆயுதங்கள். ஆனால் இவை பரிசுத்த ஆவியின் வல்லமையால் மட்டுமே செயல்படும். பல விசுவாசிகள் உலக முறைப்படி ஆவிக்குரிய போராட்டங்களைச் சந்திக்க முயற்சிப்பதால் தோல்வியடைகிறார்கள். கல்வி, பணம், திறமை ஆகியவைகளைக் கொண்டு சாத்தானை வெல்ல முடியாது. தேவனுடைய ஆவியின் வல்லமையால் மட்டுமே சாத்தானை ஜெயிக்க முடியும். ஆவியினால் நிரம்பிய விசுவாசி எப்போதும் ஜெபத்திலும், தேவ வசனத்திலும் விழிப்புடன் இருப்பார். சோதனைகள் வந்தாலும், பரிசுத்த ஆவியானவர் அவருக்கு தாங்கும் வலிமையையும் ஜெயிக்கும் சக்தியையும் தருகிறார்.

## சாட்சி பகரும் வாழ்க்கை
## WITNESSING LIFE

ஐந்தாவது அடையாளம் வல்லமையான சாட்சியாக இருப்பது. எபே.6:19,20-ல், பவுல் சுவிசேஷத்தை தைரியமாக அறிவிப்பதைக் குறித்து கூறுகிறார். அப்போஸ்தலர் 1:8-ல், 'பரிசுத்த ஆவி உங்கள் மேல் வரும்போது நீங்கள் பெலன் அடைந்து எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்' என்று இயேசு கூறினார். பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்கு தைரியத்தையும், ஆவிக்குரிய வல்லமையையும் கொடுத்து கிறிஸ்துவை அறிவிக்கச் செய்கிறார். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லாத ஊழியம் பலவீனமானதாக இருக்கும். ஆனால் பரிசுத்த ஆவியால் நிரம்பிய விசுவாசியின் வார்த்தைகளில் அதிகாரமும் ஆவிக்குரிய தாக்கமும் இருக்கும். பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் பயந்திருந்த சீஷர்கள், பரிசுத்த ஆவியால் நிரம்பிய பின் தைரியமாக சுவிசேஷத்தை அறிவித்தார்கள்; ஆயிரக்கணக்கான மக்கள் இரட்சிக்கப்பட்டார்கள். அதே பரிசுத்த ஆவியானவர் இன்றும் விசுவாசிகளை வல்லமையினால் நிரப்புகிறார். ஆவியினால் நிரம்பிய கிறிஸ்தவர்கள் அமைதியாக இருப்பதில்லை. அவர்கள் கிறிஸ்துவின் அன்பையும் இரட்சிப்பையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டிருப்பார்கள். ஆத்துமாக்களை ஆதாயம் செய்கிறவர்களாக இருப்பார்கள்!.

இன்றைய உலகம் பரிசுத்த ஆவியினால் நிறைந்து மேற்கண்ட அடையாளங்களை உடைய கிறிஸ்தவர்களை மிகவும் தேடிக்கொண்டிருக்கிறது. ஆவிக்குரிய ஏமாற்றங்கள், குழப்பங்கள், உடைந்த குடும்பங்கள் உலகம் முழுவதும் அதிகரித்து வருகின்றன. இதுவே சபை பிரகாசிக்க வேண்டிய நேரமாகும். தேவன் தமக்கு முழுமையாக ஒப்புக்கொடுக்கும் விசுவாசிகளைத் தேடுகிறார். அப்படிப்பட்டவர்களை கர்த்தர் தம்முடைய ஆவியினால் நிரப்பி பயன்படுத்த விரும்புகிறார். ஒவ்வொரு நாளும் பரிசுத்த ஆவியினால் புதிதாய் நிரப்பப்படுவோம். அப்போது நம்முடைய வாழ்நாள் முழுவதும் கிறிஸ்து மகிமைப்படுவார். நாமும் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக காணப்படுவோம். ஆமென்!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.



# உறவுகளில் கோபம்-Anger in Relationships

**Rev. J. ஸ்டேன்லி மாணிக்கராஜ்**
Senior Pastor, Assembly of God Church, Vellore
Secretary - The Thamizh Pradhesa Assemblies of God

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

பரிபூரண ஜீவன் இதழ் மூலமாக உங்களை சந்திப்பதில் சந்தோஷம் அடைகின்றேன். நம்முடைய குடும்ப வாழ்க்கையில் பிரச்சனைகள் என்பது தவிர்க்க முடியாதது. பிரச்சனை இல்லாத திருமணத்தை நாம் எதிர்பார்க்க முடியாது. பிரச்சனைகளை சரியாக கையாள தெரியாதது தான் பெரும்பாலான குடும்பங்களின் பிரச்சனைகளுக்கு காரணமாய் இருக்கின்றது. அநேக பிரச்சனைகளுக்கு அளவுக்கதிகமான தேவையில்லாத கோபம் ஒரு காரணம்.

திருமண உளவியலாளர்கள் உறவுகளில் கோபம் **(Anger in relationship)** என்பதைக் குறித்த 25 கேள்விகளை கொடுத்திருக்கிறார்கள். அதை கீழே கொடுத்திருக்கிறேன், அது உங்களுடைய வாழ்க்கையிலே சரியா? தவறா? என்பதை நீங்கள் நிதானமாக கண்டுபிடிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய பதில்களில் அளவுக்கதிகமான ஆம் என்பது இருந்தால் நீங்கள் உங்களுடைய கோபங்களை கட்டுபடுத்துவதற்கு தீவிர முயற்சி எடுக்க வேண்டும்.

வழிமுறை: ஒவ்வொரு கூற்றிற்கும் சரி (T) அல்லது தவறு (F) என்று குறிக்கவும்.

- என்னை கோபப்படுத்தும் எல்லா விஷயங்களையும் வெளிப்படுத்துவதில்லை. ஆனால் கோபத்தை வெளிப்படுத்தும்போது அது மிகவும் தீவிரமாக இருக்கும்.
- என் துணைவர் கடந்த காலத்தில் எனக்கு செய்த சில காரியங்களை நினைக்கும்போது இன்னும் கோபம் வருகிறது.
- என் துணைவர் தாமதமாக வரும்போது காத்திருப்பது எனக்கு மிகவும் எரிச்சலை ஏற்படுத்துகிறது.
- என் துணைவரிடம் நான் எளிதில் கோபத்தை இழந்து வெடித்து விடுகிறேன்.
- எனக்கு நெருக்கமானவர்களுடன் அடிக்கடி கடுமையான வாக்குவாதங்களில் ஈடுபடுகிறேன்.
- சில நேரங்களில் இரவில் தூங்காமல் படுத்துக்கொண்டு, பகல் என்னை வருத்தப்படுத்திய விஷயங்களை நினைத்துக்கொண்டே இருப்பேன்.
- என் துணைவர் என்னை வருத்தப்படுத்தும்படி ஏதாவது சொன்னாலோ, செய்தாலோ, அந்த நேரத்தில் நான் பெரும்பாலும் எதுவும் சொல்லமாட்டேன். ஆனால் பின்னர் நான் என்ன சொல்லியிருக்க வேண்டும் என்று நீண்ட நேரம் சிந்திப்பேன்.
- என் துணைவர் தவறு செய்தால் அவரை மன்னிப்பது எனக்கு மிகவும் கடினமாக இருக்கிறது.
- என் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் போகும்போது, என்மீதே எனக்கு கோபம் வருகிறது.

- என் துணைவர் அவர்/அவள் நடக்க வேண்டிய விதத்தில் நடக்காதபோது எனக்கு மிகவும் எரிச்சலாகிறது.
- நான் மிகவும் மனஅழுத்தமடைந்தால் அல்லது வருத்தப்பட்டால், பின்னர் பலவீனம், தலைவலி, வயிற்றுக் கோளாறு அல்லது வயிற்றுப்போக்கு போன்ற உடல் பாதிப்புகளை அனுபவிக்கிறேன்.
- நான் நம்பிக்கை வைத்தவர்கள் என்னை ஏமாற்றியதால், கோபமாகவும் மற்றும் துரோகம் செய்யப்பட்டதாகவும் உணர்ந்திருக்கிறேன்.
- விஷயங்கள் என் விருப்பப்படி நடைபெறாதபோது, நான் மனச்சோர்வடைகிறேன்.
- ஏமாற்றங்களையும், விரக்திகளையும் மனதில் இருந்து அகற்ற முடியாத அளவுக்கு அதிகமாக எடுத்துக்கொள்கின்றேன்.
- சில நேரங்களில் நான் மிகவும் கோபமடைந்ததால், நான் என்ன சொன்னேன் அல்லது என்ன செய்தேன் என்பதை நினைவில் வைத்திருக்க முடியவில்லை.
- என் துணைவருடன் வாக்குவாதம் செய்த பிறகு, என்னையே வெறுக்கிறேன்.
- என் கோபக்குணத்தால் சில உறவுகளை இழந்திருக்கிறேன்.
- என் துணைவர்மீது கோபமாக இருக்கும்போது, திடீரென சொல்லிவிடுகிற வார்த்தைகள் என்னை பின்னர் வருந்தச் செய்கின்றது.
- என் மோசமான கோபக்குணத்தை கண்டு என் துணைவர் பயப்படுகிறார்.
- நான் கோபமாகவோ, விரக்தியுடனோ அல்லது மனவேதனையுடனோ இருக்கும்போது, அதிகமாக உண்பதன் மூலமோ அல்லது மது/போதைப்பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலமோ என்னை ஆறுதல் படுத்திக்கொள்கிறேன்.
- என் துணைவர் என்னை புண்படுத்தினாலோ அல்லது ஏமாற்றமடையச் செய்தாலோ, அவரைப் பழிவாங்க வேண்டும் என்று நினைக்கின்றேன்.
- சில நேரங்களில் நான் மிகவும் கோபமடைந்து, பிறரை அடிப்பது அல்லது பொருட்களை உடைப்பது போன்ற வன்முறையில் ஈடுபட்டிருக்கிறேன்.
- சில நேரங்களில் என் கோபம் ஒருவரைக் கொல்ல வேண்டும் என்று தோன்றும் அளவுக்கு அதிகமாக இருந்துள்ளது.
- சில நேரங்களில் நான் மிகவும் காயப்பட்டதாகவும் தனிமையாகவும் உணர்ந்து, தற்கொலை செய்ய வேண்டும் என நினைத்திருக்கிறேன்
- நான் உண்மையிலேயே அதிக கோபம் கொண்ட மனிதன்/மனுஷி என் கோபத்தையும் சினத்தையும் கட்டுப்படுத்த கற்றுக்கொள்ள உதவி தேவை என்பதை அறிகிறேன், ஏனெனில் அவை ஏற்கனவே என் வாழ்க்கையில் பல பிரச்சனைகளை ஏற்படுத்தியுள்ளன.

இந்த உறவுகளில் கோபங்களை தவிர்ப்பதற்கு சில நடைமுறை ஆலோசனைகளை கொடுக்க விரும்புகிறேன்.

*நீங்கள் கோபம் கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள்* (எபேசியர் 4:26) என்று வேதம் நமக்கு அறிவுறுத்துகிறது. கோபம் என்பது பாவம் அல்ல. அது ஒரு

வகையான உணர்வு. ஆனால் அதை சரியான நேரத்தில் சரியான விதத்தில் வெளிப்படுத்தபடாத போது அது உறவுகளை தீவீரமாக பாதிக்கிறது.

1. உங்களுக்கு அளவுக்கதிகமான கோபம் இருந்தால், அதை கட்டுபடுத்த தீவிர ஜெபத்தை ஏறெடுங்கள். முடிந்தால் உபவாசம் பண்ணி ஜெபியுங்கள். **(Pray Sincerely)**
2. குடும்ப உறுப்பினர்களை ஆழமாக நேசிக்க கற்றுக்கொள்ளுங்கள்.அன்பு சகலத்தையும் தாங்கும், சகிக்கும் என்று வேதம் சொல்லுகிறது. **(Love your Family members deeply)**
3. பழைய பிரச்சனைகளை மறந்து மன்னிக்க கற்றுக்கொள்ளுங்கள். (**Forget the Past and Forgive**) அநேக தற்போதைய பிரச்சனைகளுக்கு காரணம் பழைய பிரச்சனைகளே. பழைய பிரச்சனைகளை மனதில் வைப்பதும், அவைகளை சுட்டி காண்பிப்பதும் நாம் அவைகளை மறக்கவில்லை என்பதை காண்பிக்கின்றது.
4. கோபத்திற்கான அடிப்படை காரணங்களை தெளிவாக கண்டுபிடியுங்கள். **(Identify the Root causes of Anger)**
5. உங்களுடைய உள்ளான மனஆரோக்கியத்தின் மேல் அதிக கவனம் செலுத்துங்கள். **(Focus on your Mental Health)** அநேக நேரங்களில் கோபத்தை உள்ளே வைத்திருப்பதும், அதை தவறான முறையில் வெளிப்படுத்துவதும் நம்முடைய சரீரத்தையும், மனதையும் ஆழமாக பாதிக்கும்.
6. சமாதானமான முறையில் பிரச்சனைகளை சரிசெய்யுங்கள். **(Resolve the issues in Peace)** நீங்கள் கோபமாக இருக்கும்போதோ உணர்வுகள் சமநிலையில் இல்லாமல் இருக்கும்போது, ஒரு பிரச்சனையை பேசும்போது அது இன்னும் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தும். ஆகவே கோபம் தணிந்த பின்பு சமாதானமான முறையில் குடும்பங்களில் பிரச்சனைகளை சரி செய்யுங்கள்.
7. உங்களை கோபப்படுத்த வேண்டும் என்று உங்கள் குடும்பத்தில் யாரோ ஒருவர் முயற்சி செய்யும்போது அதை எளிமையாக கடந்து விடுங்கள். **(Don't be too much Sensitive)**
8. கோபம் அதிகமான நேரங்களில் உங்களுடைய சிந்தனைகளையும், செயல்களையும் ஆக்கப்பூர்வமாக திருப்பிவிடுங்கள். **(Divert your Anger Constructively)**
9. கோபத்தின் நிமித்தம் பேசிக்கொள்வதை நிறுத்துவதையோ, ஆழமான முடிவுகள் எடுப்பதையோ செய்யாதிருங்கள். **(Don't stop talking with each other and take serious decision)**
10. உள்ளத்தின் ஆழத்திலிருந்து கர்த்தருடைய வசனத்தையும், நேர்மறையான வார்த்தைகளையும் சொல்லி ஆசீர்வதியுங்கள். **(Bless others with God's Words and Positive words)**

மேற்கண்ட யாவும் குடும்ப கண்ணோட்டத்தில் சொல்லப்படுகின்ற எளிமையான ஆலோசனைகள் கோபத்தினால் உங்கள் உறவுகள் பாதிக்கப்படுவதையோ, திருமணங்கள் சீர்குலைந்து போவதையோ ஒருபோதும் அனுமதியாதிருங்கள். கர்த்தர் தாமே உங்களுக்கு தேவையாக கிருபைகளையும், ஞானத்தையும், ஆசீர்வாதங்களையும் தருவாராக! ஆமென்!



# கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷன்


**திருமதி. கெட்சியாள் மோகன்**

President, Women's Fellowship Department


அன்பான பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

தாவீது ராஜாவைக் குறித்து இவ்விதழில் சிந்திப்போம். கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள் மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார் (1சாமு.13:14) என்று சாமுவேல் தீர்க்கதரிசி கூறுகிறார். தேவன் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு நபரை முழு இஸ்ரவேலரிலும் தேடி, தாவீதைக் கண்டுபிடித்தார். அவரை ராஜாவாக அபிஷேகம் பண்ணும்படி தேவன் தீர்க்கதரிசியாகிய சாமுவேலை ஈசாயின் வீட்டிற்கு அனுப்பியபோது, தீர்க்கதரிசி தாவீதுடைய சகோதரர்களைக் கண்டு, அவர்களின் உடற்தோற்றத்தைப் பார்த்து தேவன் அவர்களைத் தெரிந்திருக்கக் கூடுமோ என்று எண்ணுகிறார். ஆனால், கர்த்தர் சாமுவேலைப் பார்த்து, மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார் (1சாமு.16:7). எல்லாரும் முகத்தையும் சரீர வளர்ச்சியையும் பார்த்தபோது, தேவன் மட்டும் தாவீதின் இருதயத்தைப் பார்த்தார். தேவன் தேடிக் கண்டுபிடித்த நல்ல இதயம் கொண்டவர் தாவீது. ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்ப்பதும் நம்முடைய தூய்மையான இருதயத்தை தான். நாமும் தேவனுடைய இருதயத்தை அறிந்து அதன்படி செயல்பட வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார்.

தாவீது எப்படி தேவனின் இருதயத்தைக் கொள்ளை கொண்டான் என்று பார்ப்போம். அவன் ஆடுகளை மேய்க்கும்படி அனுப்பப்பட்டிருந்தான். சாமுவேல் தீர்க்கதரிசி அவன் தகப்பனாகிய ஈசாயிடம் உன் பிள்ளைகளை கொண்டு வா. தேவன் அவர்களில் ஒருவனை ராஜாவாக அபிஷேகம் பண்ண சித்தம் கொண்டுள்ளார் என்று கூறினபோது, அவன் தகப்பனுக்குக் கூட அவனை அழைத்தனுப்ப வேண்டும் என்று தோன்றவில்லை. அப்படி எண்ணப்படாமல் விடப்பட்டிருந்த அவனை தேவன் அறிந்திருந்தார். நினைவில் வைத்திருந்தார். நீங்களும் தகுதியற்றவர்கள் என்று அற்பமாய் எண்ணப்பட்டிருந்தாலும், உங்கள் இருதயம் தேவனுடைய இருதயத்தோடு பொருந்தியிருக்குமாயின், தேவன் ஒருநாளும் உங்களை மறப்பதில்லை. உங்களுக்கு வரவேண்டிய உயர்வு நிச்சயமாக அவரால் வரும். மற்றவர்கள் உங்களை அங்கீகரிக்காமல் போகலாம். உங்கள் உயர்வைத் தடுக்கலாம். ஆனால், தேவன் அதை நடத்திக் காண்பிப்பார்

## நல்ல மேய்ப்பனுடைய இருதயம்

அவன் தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட ஆடுகளை நன்றாய் பராமரித்தான். மந்தையிலிருந்த ஒரு ஆட்டை ஒருவிசை ஒரு சிங்கமும், ஒருவிசை ஒரு கரடியும் வந்து பிடித்துக் கொண்டபோது, அவன் தன் உயிரையும் பொருட்படுத்தாமல், அதை தொடர்ந்து போய், அதை அடித்து அதன் வாயிலிருந்து ஆட்டைக் காப்பாற்றினான். ஒரு ஆடு தானே போகட்டும் என்று விட்டுவிடவில்லை. தன் மந்தை மேய்ப்பவர்களிடம் காப்பாற்றும்படி கூறவில்லை. ஆடுகளின் நலனில் அவன்

கொண்டிருந்த அக்கறை அவனை விரட்டியது. தன் உயிரையும் பொருட்படுத்தாமல் ஓடினான். ஆட்டை விடுவித்தது மட்டுமல்லாமல், தன் மேல் பாய்ந்த அவைகளையும் கொன்று தன் ஜீவனையும் காப்பாற்றிக் கொண்டான். அந்த நல்ல மேய்ப்பனின் இருதயம் ஆண்டவருடைய இருதயத்தைக் கொள்ளை கொண்டது. நம்மைச் சுற்றிலும் அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்கள் எத்தனை பேர் இருக்கின்றனர். சாத்தானால் கொள்ளையடிக்கப்பட்டவர்களும் சிறைபிடிக்கப்பட்டிருக்கிறவர் களுமாகிய நம்முடைய குடும்பத்தார், உறவினர்கள், இனத்தார், அயலகத்தார் மேல் நீங்கள் அக்கறை கொள்கிறீர்களா? அவர்களை சாத்தானின் பிடியிலிருந்து விடுவிக்க நீங்கள் என்ன முயற்சி எடுக்கிறீர்கள்? அவர்களுக்காக திறப்பில் நிற்கிறீர்களா? உயிரையும் பணயம் வைத்து தாவீது தன் தகப்பனுடைய ஆடுகளை மீட்டானே, நீங்கள் நம் தகப்பனாகிய தேவனுடைய ஜனத்தை மீட்க என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்காக நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு பிரயாசமும் தேவனுடைய இருதயத்தை திருப்திபடுத்து வதாகவும், பிரியப்படுத்துவதாகவும் இருக்கின்றது. மாத்திரமல்ல, அவன் தகப்பன், அவனை யுத்த களத்திற்கு போய் அவன் சகோதரர்களை விசாரித்து வரும்படி கூறிய போது, அவன் அதிகாலையில் எழுந்து, ஆடுகளை காவலாளி வசமாய் விட்டு, தன் தகப்பன் சொன்னபடி செய்தான் (1 சாமு.17:20). அவன் தன் வசம் ஒப்புவிக்கப்பட்ட ஆடுகளை பொறுப்பாக கவனித்துக் கொண்டான். நம் தேவன் நம்மிடம் கொடுத்துள்ள பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினரை கவனமாய்ப் பார்த்துக் கொள்கிறோமா? வேலை, ஊழியம் என்று பொறுப்புகளை உதறித் தள்ளுகிறோமா? தேவன் நம்மிடம் ஒப்படைத்துள்ள பொறுப்புகளை உத்தரவாதத்துடன் செய்வது அவருடைய இருதயத்திற்கு பிரியமாய் இருக்கும்.

## சத்துருக்களை நேசிக்கும் இருதயம்

தாவீதைப் போல சத்துருக்களை நேசித்த ஒருவரைப் பார்க்க முடியாது. காரணமில்லாமல் தன் உயிரை வேட்டையாடின ஒருவரை, அவன் மன்னித்தான். இருதயத்தாலும் ஒரு தவறும் செய்யாதிருந்தும், சவுல் ராஜா அவனை வேட்டையாடுகிறான். தாவீது உத்தம இருதயத்தோடு ராஜாவை சேவித்தான். இருப்பினும், தன் குடும்பத்திற்கு ராஜ்யபாரம் கிடைக்காமல் போய்விடும் என்ற பயத்தினால், தனக்கு உதவியாய் இருந்த ஒருவனை இராஜா வேட்டை ஆடுகிறான். தேவனால் விடப்பட்ட அசுத்த ஆவி வந்து அவனை அலைக்கழித்தபோது, அவனை அமைதிப்படுத்த தாவீது வாத்தியக் கருவியை வாசித்தான். அந்த நன்மையைக் கூட எண்ணிப் பார்க்காமல், அந்த நேரத்திலேயே அவனை ஈட்டியால் சுவரோடு சேர்த்துக் குத்திப் போடும்படி ராஜா முயற்சித்தான். ராட்சசனாகிய கோலியாத்தைக் கொன்ற தாவீதிற்கு, சவுலை ஒரே கல்லால் வீழ்த்துவது மிக மிக லேசான காரியம். ஆனாலும் அவன் தேவனால் அபிஷேகம் செய்யப்பட்ட ராஜாவின் மேல் நான் கை போடமாட்டேன் என்று தீர்மானித்திருந்தான். இராஜா அவனை ஒரு பட்சியைப்போலும், தெள்ளுப் பூச்சியைப்போலும் வேட்டையாடினதினிமித்தம், அவன் குகைகளிலும், மலைகளிலும், வனாந்திரத்திலும், காடுகளிலும், தண்ணீரும் உணவுமின்றி அலைந்து கொண்டிருந்தான். அந்த நேரத்தில், சவுலைக் கொல்லும்படி சாதகமான இரண்டு தருணங்கள் அமைந்தது. தாவீதுடன் கூட இருந்தவர்கள், கர்த்தர் உம்முடைய சத்துருவை உம்முடைய கையில் ஒப்புக் கொடுத்திருக்கிறார். நாங்கள் ஒரே குத்தாகக் குத்திக் கொன்று போடுகிறோம் என்று சொன்னபோதும், தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் மேல் கை போடாதீர்கள் என்று அவர்களை எச்சரித்தான். தான் அவரைக் கொன்று போடாமல்

விட்டதுமல்லாமல், தன்னுடன் இருந்தவர்களும் அவரைக் கொல்லாமல் பார்த்துக் கொண்டான். தன்னை தூஷித்து தன்மேல் கற்களை எறிந்த சீமேயி என்பவனையும், தாவீது மன்னித்து விடுகிறான். தன் மகனாகிய அப்சலோம் தனக்கு விரோதமாக எழும்பி யுத்தம் செய்தபோதும், தாவீது தன் படைத்தளபதிகள் மூவரிடமும், பிள்ளையாண்டான் மேல் கை போடாதேயுங்கள் என்று கட்டளைக் கொடுத்தான். அவன் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்தாலும், புது உடன்படிக்கையின் இருதயம் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. நம்முடைய பழைய சுபாவங்களாகிய பகை, கசப்பு, விரோதம், கோபம், சண்டை, பிரிவினை, பழிவாங்குதல், கோள் சொல்லுதல், அவதூறு செய்தல், தூற்றித்திரிதல் போன்ற ஜென்ம சுபாவங்கள் மாறி, நாம் கிறிஸ்துவின் சுபாவத்தைத் தரித்துக்கொள்ள வேண்டும். இது ஒரே நாளில், தானாகவே மாறிவிடாது. இதற்கு நாம் பரிசுத்த ஆவியானவரின் துணையோடு, பயத்தோடும், நடுக்கத்தோடும், பிரயாசப்பட வேண்டும் (workout your own salvation with fear and trembling) (பிலி.2:12). கிறிஸ்துவின் செயலாகிய அவரது சுபாவம் நமக்குள் உருவாகாவிட்டால், நாம் அவரை தரிசிக்கவும் முடியாது, அவருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்படவும் முடியாது. இதனால் தான் அப்போஸ்தலனாகிய பவுல், நான் ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் (I discipline my body and keep it under control- 1 கொரி.9:27) என்று கூறுகிறார். நாமும் நம்முடைய சரீரத்தை ஒடுக்கி கர்த்தருக்குப் பிரியமானதை செய்யும்படி அதைக் கீழ்ப்படுத்தக் கற்றுக் கொண்டோமாகில், தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவர்களாய் மாறுவோம்.

### தேவ சித்தத்தை அறியும் இருதயம்

தாவீது, வாசிப்பதில் தேறினவன், பராக்கிரமசாலி, யுத்தவீரன், காரிய சமர்த்தன் என்று வேதாகமம் அவனை வர்ணிக்கிறது (1 சாமு.16:18). இருப்பினும் அவன் தன பலத்தையோ, திறமைகளையோ, தாலந்துகளையோ, நம்பாமல், சார்ந்திராமல், தேவனையே சார்ந்து கொண்டிருந்தான். சிறிதும் பெரிதுமான ஒவ்வொரு யுத்தத்திற்கும் தேவனிடம் விசாரித்தான். தேவன் போவென்று சொன்னால் மாத்திரமே போவான். நான் தான் கோலியாத்தையே கொன்று போட்டேனே "தாவீது கொன்றது பதினாயிரம்" என்று ஊரே என்னைக் கொண்டாடினதே, நான் எளிதில் இந்த போரை வென்று விடுவேன் என்று ஒரு நாளும் அவன் நினைக்கவில்லை. எந்த வெற்றியும், எந்த பாராட்டும் அவன் தலைக்குள் ஏறவில்லை. அவன் தன் நிலைமையை நன்றாய் அறிந்திருந்தான். கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த என்னை, தேவன் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலை மேய்ப்பதற்காக அழைத்துக் கொண்டு வந்தார் (சங்.78:71) என்பதை அவன் நன்றாக அறிந்திருந்தது மட்டுமல்லாமல், அதை எப்போதும் நினைவில் வைத்திருந்தான். எனவே அவன் தன்னை நம்பாமல், ஒவ்வொரு காரியத்திற்கும் தேவ ஆலோசனையைப் பெற்றான். தேவ சித்தம் என்னவென்பதை அறிய நாம் அங்குமிங்கும் ஓடி அலைய வேண்டியதில்லை. தேவன் தம்முடைய சித்தம் என்னவென்பதை வேதாகமத்தில் எழுதிக் கொடுத்துள்ளார். எனவே நாம் வேதத்தை நன்றாக வாசித்து, ஒவ்வொரு காரியத்தைக் குறித்தும் தேவ சித்தம் என்னவென்பதை அறிந்து அதன்படி செயல்பட வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். தேவனோடு நம் இருதயம் பொருந்தியிருக்கும்போது, அவர் தம்முடைய சித்தத்தை நம்முடன் நேரடியாகவே பேசுவார். தீர்க்கதரிசிகள் ஒருவேளை அதை உறுதிப்படுத்தலாம். எனவே தேவ சமுகத்தில் காத்திருந்து, வேதத்தை வாசித்து ஒவ்வொரு காரியத்திலும் நாம் தேவனுடைய சித்தத்தை செய்யும்போது, அவருடைய இருதயத்திற்கு ஏற்றவர்களாக மாறுகிறோம்.

## தேவ பிரசன்னத்தை வாஞ்சிக்கும் இருதயம்

தேவனுடைய பெட்டியைக் கொண்டுவரும்படி அவனுடைய முதல் முயற்சி தோற்றுப்போனாலும், அவன் சோர்ந்து போகவில்லை. திரும்ப முயற்சித்து அதைக் கொண்டு வந்து சேர்த்தான். அதைக் கொண்டுவரும்போது அவன் மிகுந்த சந்தோஷமடைந்து, பெட்டிக்கு முன்பாக நடனமாடினான். யார் நம்மைக் கேவலமாக நினைப்பார்கள் என்று அவன் யோசிக்கவில்லை. தன்னை உயர்த்திய தேவனுடைய பிரசன்னம் நிறைந்த தேவனுடைய பெட்டி தாவீதின் நகருக்கு வருவது அவனுக்கு மிகுந்த சந்தோஷத்தை அளித்தது. நம்முடைய வீடுகளில் தேவ பிரசன்னம் இருக்கிறதா? தனி ஜெப நேரங்களும், குடும்ப ஜெப நேரங்களும், தேவ பிரசன்னத்தை நம்முடைய வீடுகளுக்குள் கொண்டு வரும். ஜெபிப்பதற்கான நேரமும், இடமும் உங்களுக்கு இருக்கிறதா? விரும்பி வேதத்தை வாசித்து ஜெபிக்கிறீர்களோ? உங்கள் பிள்ளைகளை அவ்வண்ணம் பழக்குவிக்கிறீர்களா? அதுவே தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவர்களாக நம்மை மாற்றும்.

தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாகிய தாவீது இராஜாவைப் போல, நாமும், அழிந்துபோகிற ஆத்துமாக்களின் பேரில் அக்கறை உள்ள இருதயம் உள்ளவர்களாகவும், சத்துருவை நேசிக்கும் இருதயம் உள்ளவர்களாகவும், தேவ சித்தத்தை அறியும் இருதயம் உள்ளவர்களாகவும், தேவ பிரசன்னத்தை வாஞ்சிக்கும் இருதயம் உள்ளவர்களாகவும் மாறும்போது, தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவர்களாக மாறுவோம். தேவன் தாமே அப்படிப்பட்ட இருதயத்தைப் பெற்றுக்கொள்ளும் வாஞ்சையை உங்களுக்குத் தந்து, அதைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கு உதவி செய்வாராக!.

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484

---

## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

குறிப்பு: காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**

30, நாவலர் நகர், மதுரை–625 016. போன் : 0452 4200664



# நாகூம் : Nahum

புத்தக அறிமுகம்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University,

Asst.Superintendent, The Thamizh Pradhesa Assemblies of God

## நாகூம் புத்தகம்

ஓசியா முதல் மல்கியா வரையுள்ள பன்னிரண்டு புத்தகங்களும் சிறிய தீர்க்கதரிசனப் புத்தகங்கள் என அழைக்கப்படுகின்றன. அதில் ஏழாவது புத்தகமாக வருவதுதான் நாகூம் தீர்க்கதரிசியின் புத்தகம்.

## நாகூம் என்ற தீர்க்கதரிசி

நாகூம் வடக்கு ராஜ்யத்திலுள்ள கலிலேயாவில் பிறந்து வளர்ந்தவனாவான். அசீரியர் வந்து அதை சிறைப்பிடித்துச் சென்றபோது தெற்கு ராஜ்யமாகிய யூதாவுக்கு ஓடிவந்து அங்கு **எல்கோஸ்** என்னும் சிற்றூரில் குடியிருந்தான். அங்கிருந்து நினிவேக்கு ஆண்டவரின் நியாயத்தீர்ப்பின் செய்திகளைச் சொன்னான்.

ஒபதியாவும் நாகூமும் யூதரல்லாத புற ஜாதியாருக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தவர்களாவர். ஒபதியா ஏதோம் தேசத்துக்கும், நாகூம் அசீரியாவிலுள்ள நினிவேக்கும் எதிராக தீர்க்கதரிசனம் உரைத்தனர். யோனா சுமார் 50 ஆண்டுகள் வடக்கு ராஜ்யமாகிய இஸ்ரவேலில் ஊழியம் செய்த பின்பு சிறப்பு அழைப்பாக நினிவேக்குச் சென்று நியாயத்தீர்ப்பின் செய்தியையும், இரட்சிப்பின் செய்தியையும் கொடுக்க அனுப்பப்பட்டான். எனவே யோனாவை வடக்கு ராஜ்யத்துக்குத் தீர்க்கதரிசனம் சொன்னவனாகவே வகைப்படுத்துவது வழக்கம்.

## நாகூமும் யோனாவும்

நாகூம் யோனாவுக்கு 100 ஆண்டுகளுக்குப் பின் நினிவேக்கு எதிராகத் தீர்க்கதரிசனம் உரைத்தான். யோனா 2ம் யெரொபெயாம் காலத்தில் (கி.மு.793-753) ஊழியம் செய்தவன். நாகூம் கி.மு 612-ல் நினிவே வீழ்ச்சியடைவதற்குமுன், கி.மு.663-க்கும் 612க்கும் இடைப்பட்ட காலத்தில் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கலாம். குறிப்பாக யோசியா ராஜாவின் காலத்தில் ஏற்பட்ட மார்க்க எழுப்புதலில் (கி.மு 630-620) நாகூம் பங்குபெற்றிருப்பான் என எண்ணவும் இடமுண்டு.

யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு தங்கள் பாவ வழிகளை விட்டு நினிவே மக்கள் மனந்திரும்பினர். தேவன் அவர்களுக்கு இரங்கி தாம் அவர்களுக்கு செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு அதை செய்யாதிருந்தார் என்று யோனா 3:10-ல் வாசிக்கிறோம்.

யோனாவின் காலத்திலிருந்து சுமார் 100 வருடங்களுக்குள் நினிவே மக்கள் மறுபடியும் தங்கள் பழைய துன்மார்க்கமான பாவ வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டனர்.

இந்தமுறை இரட்சிப்பின் செய்தியைக் கொடாமல், நாகூம் தீர்க்கதரிசியின் மூலமாக அழிவின் நியாயத்தீர்ப்பின் செய்தியைக் கர்த்தர் கொடுத்தார். கி.மு.630-ல் நியாயத்தீர்ப்பின் செய்தியை தீர்க்கமாக தீர்க்கதரிசி அறிவித்தான். நாகூமின்

தீர்க்கதரிசனத்தின்படியே கி.மு 612ம் வருடத்தில் பாபிலோனியர் வந்து அசீரியாவை முறியடித்து, நினிவேயை அழித்தனர்.

## கொடுமையின் உச்சம், நினிவே நகரம்

நாகூம் உரைத்தபடி நினிவேயின்மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் உக்கிரம் ஊற்றப்படக் காரணம் என்ன? உலக சரித்திரத்தில் நினிவேயைப்போல் கொடுமை நிறைந்த நகரம் எங்கும் காணப்பட்டதில்லை.

அசீரிய மன்னர்களும், மக்களும் கொடுமைக்குப் பேர் பெற்றவர்கள், இரத்தப்பழிகளுக்கு அஞ்சாதவர்கள். தங்களை எதிர்ப்பவர்களைக் கொடுமைப் படுத்துவது அசீரிய ராஜாக்களுடைய வழக்கம்.

யுத்தத்துக்குச் சென்று போர்வீரர்களைக்கொன்று போர்ச்சேவகர்களின் பிரேதங்களை களிமண்போல குவித்து வைத்தனர். எதிரிநாட்டு ராஜாக்களில் கொல்லப்பட்டவர்களின் தலைகளைக் கொண்டு பிரமிடுகளை உண்டு பண்ணினார்கள். தேங்காய் அம்பாரம்போல செத்தவர்களின் தலைகள் குவித்து வைக்கப்பட்டன. அகன்ற வனாந்திரப் பாதைகளை இரத்தம் சிந்தி சிவப்பாக்கினர். தொழுமரங்களில் எதிரிகளைக் கட்டிகுவியலாகக் குவித்தனர். ராஜாக்களின் கைகால்களை வெட்டி, அவர்கள் சரீரங்களைச் சுவரில் ஆணியால் அடித்துவைத்து மகிழ்ந்தனர். பட்டண வாசல்களில் தங்கள் எதிரிகளின் பிணங்களை நாறவைத்து, நாய்களும் கரடிகளும் தின்னும்படி வைத்தனர். கைதிகளாகப் பிடித்து வரப்பட்டவர்களை செங்கல் அறுக்க வைத்தனர். கழுகுகள் பிணங்களைத் தூக்கிப்பறந்தன. எனவே ஆகாயத்தையும் பிணங்களால் நிரப்பினர். தங்கள் அரண்மனைத் தூண்களை தங்களை எதிர்த்து வந்த அரசர்களின் தோள்களினால் பொதிந்தனர்.

இப்படிப்பட்ட கொடுமை நிறைந்த பட்டணமே நினிவே. யோனாவின் செய்தியைக் கேட்டு மனந்திரும்பி உண்மையான தெய்வமாகிய யெகோவாவை ஆராதித்த இம்மக்கள், அதிலிருந்து 100 ஆண்டுகளுக்குள் மீண்டும் பழைய விக்கிரக ஆராதனைக்கும், வேசித்தனங்களுக்கும், கொடுமைக்கும் திரும்பிச் சென்றுவிட்டனர். எனவே, கர்த்தரின் நியாயத்தீர்ப்பாகிய அழிவு வருகிறது என்ற செய்தியை அறிவிக்கும்படி கர்த்தர் நாகூம் தீர்க்கதரிசியை அனுப்பினார்.

## நாகூம் புத்தகத்தின் நோக்கங்கள்:

இரண்டு பிரதான நோக்கங்களுடன் இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது:

- நினிவேயின் மேல் வரும் நியாயத்தீர்ப்பு.
- யூதாவின் ஆறுதல்: கொடுமைக்குப் பதில் செய்து தமது நீதியை நிலைநாட்டும் கர்த்தர், நிச்சயமாக தமது மக்களுக்கு ஆறுதல் செய்வார் என்பதைத் தெளிவுடன் எடுத்துச் சொன்னான் நாகூம்.

## நாகூம் புத்தகத்தின் கருப்பொருள் (theme) வசனம்:

நாகூம் 1:3 ஐ இப்புத்தகத்தின் கருப்பொருள் வசனமாகக் கொள்ளலாம்.

"கர்த்தர் நீடிய சாந்தமும் மிகுந்த வல்லமையுமுள்ளவர். அவர்களை ஆக்கினையில்லாமல் தப்பவிக்கமாட்டார். கர்த்தருடைய வழிசுழல் காற்றிலும் பெருங்காற்றிலும் இருக்கிறது; மேகங்கள் அவருடைய பாதத்தூளாயிருக்கிறது."

## நாகூம் புத்தகத்தின் பொருளடக்கம்

மூன்று அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ள இப்புத்தகத்தில் மொத்தம் 47 வசனங்களே உள்ளன. அதைக் கீழ்க்கண்டவாறு பகுத்துக் காணலாம்:

1. பழிவாங்குவது போலவே நியாயத்தீர்ப்புச் செய்யும் தேவனுடைய தன்மை, (1ம் அதிகாரம்).
2. நினிவேயின் அழிவைக் குறித்த விபரங்கள், (2ம் அதிகாரம்).
3. தவிர்க்க முடியாத நினிவேயின் வீழ்ச்சிக்குக் காரணங்கள், (3ம் அதிகாரம்).

## நாகூம் விவரிக்கும் கர்த்தர்

நாகூம் தனது புத்தகத்தில் வரவிருந்த நியாயத் தீர்ப்பை மட்டும் கூறவில்லை. மாறாக, அந்த நியாயத்தீர்ப்பைக் கொடுத்தக் கர்த்தர் யார் என்பதையும் விவரிக்கிறான்:

- **வைராக்கிய வாஞ்சையுள்ள கர்த்தர் (Jealous God):**

தேவன் ஒருவரே. அவருக்கு நிகரானவர் ஒருவரும் இல்லை. தமக்கு நிகராக விக்கிரகங்களை உண்டுபண்ணி வணங்கி நமஸ்கரிப்பதை தேவன் வெறுக்கிறார். இந்த தேவன் யார் என்பதை யோனாவின் நாட்களில் நினிவேயின் மக்கள் தெளிவாய்க் கண்டு அறிந்திருந்தாலும், அவரே தேவன் என்று கொள்ளாமல் தாங்கள் வணங்கும் பல தெய்வங்களுள் அவரும் ஒருவர் என்றே நடந்து கொண்டனர்.

- **தமது சத்துருக்கள்மேல் சினம் கொள்ளுகிறவரும் பழிவாங்குகிறவருமான தேவன் (Avenging and wrathful against His enemies):**

அன்றுள்ள அசீரிய தேசம், இன்று வடக்கு ஈராக், தெற்கு துருக்கி, வடமேற்கு ஈரான் மற்றும் வடகிழக்கு சீரியா ஆகிய பகுதிகளில் சிலவற்றை உள்ளடக்கியுள்ளது. சதாம் உசேன் காலத்தில் மிகவும் கொடுமைக்குள்ளானார்கள்.

- **கோபப்பட தாமதிப்பவர் (Slow to anger):**

யோனாவின் காலத்திலேயே (சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பாகவே) நினிவே நியாயந்தீர்க்கப்பட்டு அழிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடையத் திட்டம் (யோனா 3:4). எனினும் அவர்கள் தங்கள் பொல்லாத வழியை விட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு அதைச் செய்யாதிருந்தார் (யோனா 3:10).

- **வல்லமையில் சிறந்தவர் (Great in power):**

இப்புத்தகத்தின் கருப்பொருள் வசனம் (1,3) இதையே சொல்லுகிறது. அதுமட்டுமல்ல, கர்த்தருடைய சர்வ ஆளுகை ஆகாயத்தின் மேலும், சமுத்திரத்தின் மேலும், பூமியெங்கும், பூச்சக்கரத்தில் கடைசி மட்டும் செல்கிறது என்றும் கூறுகிறான் (நாகூம் 1:3,4;5-6).

- **கர்த்தர் நல்லவர் (He is good):**

"கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார் (நாகூம் 1:7)".

இந்த நல்ல தேவன் அசீரியரின் துன்மார்க்கத்தினிமித்தம் தமது உக்கிரகோபத்தை வெளிப்படுத்தவிருக்கிறார். எனினும் அவர்கள் அவரை

நம்பவுமில்லை, அடைக்கலமாய் அவரிடம் வரவுமில்லை. நினிவே மக்கள் கர்த்தரை நிராகரித்தனர். எனவே அவர் அவர்களுக்குப் பாதுகாப்பாயிருக்கவில்லை.

**நாகூமின் பெயரும் அவனுடைய செய்தியும்:**

நாகூம் என்ற பெயரின் பொருள் ஆறுதல் (Comfort) என்பதாகும். ஆனால் அவன் நினிவே மக்களுக்கு எதிராக மிகக் கொடுமையான அழிவின் நியாயத்தீர்ப்பின் செய்திகளை அறிவித்தான். ஆறுதல் எங்கே போயிற்று? ஆறுதலான வார்த்தைகளை தனது சொந்த ஜனங்களாகிய யூதாதேசத்துக்கு அறிவித்தான். நாகூமின் தீர்க்கதரினச் செய்தி தவிர்க்க முடியாததும் மிகக் கடுமையானதுமாக இருந்தது, தீர்க்கதரிசி அறிவித்தது போலவே கி.மு.612-ல் நியாயத்தீர்ப்பு நினிவேயின் மேல் வந்தது. பாபிலோனியர் வந்து அசீரியாவை ஜெயித்து நினிவே நகரத்தையும் அழித்துப்போட்டனர்.

நீதிமான்கள்மேல் கர்த்தருடைய கண்கள் நோக்கமாயிருப்பதுபோலவே, தங்கள் அக்கிரமத்தில் துணிந்து நடக்கிற தேசத்தின்மேல் குறியாய் உள்ளது,

பாவத்தின் கொடூரம் கொடூரமான நியாயத்தீர்ப்பையும் கொண்டுவரும்.

தண்டனைக்கு பயந்து மனந்திரும்புவது உண்மையான மனந்திரும்புதல் அல்ல. கர்த்தருக்கு பயந்து எப்போதும் நீதியுள்ள வாழ்க்கை வாழ வேண்டும்.

யோனாவின் காலத்தில் நினிவேயைத் தப்பவிட்ட தேவன் நாகூம் காலத்தில் நிரந்தர நியாயத்தீர்ப்பை அனுப்பினார். எனவே இப்புத்தகத்தின் மூலம் நாம் பெறும் எச்சரிப்புகளைக் கவனித்துப் பார்த்து கர்த்தரை அண்டிக்கொள்ளுவோமாக!.

---

## HOW TO PREPARE FOR THE COMING OF JESUS?

இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்படுவது எப்படி?
மத்தேயு 24:44; 25:10. வெளி. 19:7

1. **PURIFY** YOURSELF.
   பரிசுத்தராயிருங்கள்
   யூதா 23; 1 யோவான் 3:2,3; 2 பேதுரு 3:14; வெளி. 22:11

2. **PRAY** WITH WATCHFULNESS
   ஜெபம்பண்ண ஜாக்கிரதையாயிருங்கள்
   யூதா 20; 1 பேதுரு 4:7; லூக்கா 21:36

3. **PRACTISE** CHRISTIAN LOVE
   கிறிஸ்துவின் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்
   யூதா 21; மத்தேயு 25:32-45; 24:12; 2 தீமோ. 3:3




4. **PROCLAIM** THE GOSPEL
   சுவிசேஷத்தை அறிவியுங்கள்
   யூதா 22; 2 தீமோ.4:1,2; 2 பேதுரு 3:9; மத்.24:14

5. **PERSEVERE** IN FAITH.
   விசுவாசத்தில் உறுதியாயிருங்கள்
   லூக்கா 18:8; யூதா 20; 1 பேதுரு 5:9; 1 தீமோ.4:1.

## எபேசுவில் வசனத்தின் மூலம் ஏற்பட்ட எழுப்புதல்

‘‘இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது” (அப்போஸ்தலர் 19:20).



“இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது” என்ற இந்த வசனம் எபேசுவில் நிகழ்ந்த மகத்தான ஆவிக்குரிய எழுப்புதலின் சுருக்கமாகும். இந்த எழுப்புதலின் அடிப்படை காரணம் கர்த்தருடைய வார்த்தையின் அறிவிப்பாகும் **(PROCLAMATION OF THE WORD).** பவுல் எபேசுவில் தினந்தோறும் தேவனுடைய வார்த்தையை போதித்தார். மனித ஞானமும் திறமையும் அல்ல, தேவனுடைய வார்த்தையே மக்களின் இருதயங்களைத் தொட்டது. அவர்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சத்தியத்தை அறிந்து மனந்திரும்பினர். வேதாகமம் அறிவிக்கப்படும் இடத்தில் விசுவாசம் உருவாகிறது; விசுவாசம் உருவாகும் இடத்தில் மாற்றம் நிகழ்கிறது. இன்று சபைகள் வளரவும், குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்படவும், தனிநபர்கள் ஆவிக்குரிய முன்னேற்றம் அடையவும் தேவனுடைய வார்த்தைக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு உண்மையான ஆவிக்குரிய எழுப்புதலும் தேவனுடைய வார்த்தையிலிருந்தே தொடங்குகிறது. ஆகவே, நாம் தேவனுடைய வார்த்தையை உண்மையோடும் தைரியத்தோடும் அறிவிக்க வேண்டும்.

இந்த வசனம் தேவனுடைய வார்த்தையின் வல்லமையையும் வெளிப்படுத்துகிறது **(POWER OF THE WORD).** லூக்கா கூறும்போது, “வல்லமையாய் வளர்ந்து” என்று கூறுகிறார். இது வார்த்தை வெறுமனே பரவியது என்பதல்ல; அது மக்களின் வாழ்க்கையை ஆழமாக மாற்றியது என்பதாகும். எபேசுவில் பலர் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, சூனியமும் மந்திரவாதமும் சம்பந்தப்பட்ட புத்தகங்களை எரித்தனர். அவர்கள் பழைய வாழ்க்கையை விட்டு புதிய வாழ்க்கைக்குள் வந்தனர். தேவனுடைய வார்த்தை இன்று கூட அதே வல்லமையைக் கொண்டுள்ளது. அது பாவியை மனந்திரும்பச் செய்கிறது; உடைந்த இருதயத்தை ஆற்றுகிறது; குழப்பமான மனதைப் புதுப்பிக்கிறது; விசுவாசியை பரிசுத்த வாழ்க்கைக்கு வழிநடத்துகிறது. மனித முயற்சியால் மாற்ற முடியாதவற்றை தேவனுடைய வார்த்தை மாற்றுகிறது. ஆகவே, நாம் வேதாகமத்தை வெறுமனே கேட்பவர்களாக அல்ல, அதை விசுவாசித்து கீழ்ப்படிவோராகவும் இருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தை செயல்படும்போது வாழ்க்கை மாற்றமடைகின்றன.

இறுதியாக, கர்த்தருடைய வார்த்தை “மேற்கொண்டது” **(PREVAILING OF THE WORD)** என்று லூக்கா கூறுகிறார். எபேசுவில் சுவிசேஷத்திற்கு எதிராக பல சக்திகள் செயல்பட்டன. விக்கிரக ஆராதனை, மூடநம்பிக்கை, மந்திரவாதம் மற்றும் பல்வேறு எதிர்ப்புகள் இருந்தபோதிலும், தேவனுடைய வார்த்தையை யாராலும் தடுக்க முடியவில்லை. அது இருளின் சக்திகளை மேற்கொண்டு வெற்றி பெற்றது. இதுவே தேவனுடைய வார்த்தையின் தன்மை. உலக அரசுகளும், மனித தத்துவங்களும், கலாச்சாரங்களும் மாறலாம்; ஆனால் தேவனுடைய வார்த்தை என்றென்றும் நிலைத்திருக்கிறது. இன்று கூட உலகின் பல பகுதிகளில் எதிர்ப்புகள் இருந்தாலும், சுவிசேஷம் தொடர்ந்து முன்னேறிக்கொண்டே இருக்கிறது. எனவே நாம் தேவனுடைய வார்த்தையின் மீது முழு நம்பிக்கை வைக்க வேண்டும். அதை தைரியமாகப் பிரசங்கிக்கவும், உண்மையோடு போதிக்கவும், ஆர்வத்துடன் படிக்கவும், முழுமனதுடன் கீழ்ப்படியவும் வேண்டும். அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை நமது வாழ்க்கைகளிலும், குடும்பங்களிலும், சபைகளிலும், சமுதாயத்திலும் வல்லமையாய் வளர்ந்து மேற்கொள்ளும். ஆமென்.



# கண்ணீர் ஜெபம் தேவை


## Rev. A. எட்வின் பிரபாகர்

இயக்குநர், தமிழ் பிரதேச வடகிழக்கு மிஷன் இலாக்கா


பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் வடகிழக்கு மிஷன் இலாக்கா விலிருந்து அன்பான வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறோம். சர்வ வல்லமையுள்ள தேவன் நமது மிஷன் பணிகளை ஆசீர்வதித்து வருகிறார். தேவனுக்கே மகிமை அதே சமயம் இக்காலம் கடைசி காலமாயிருக்கிறது. இது கொடிய காலமாயிருக்கிறது (2 தீமோ.3:1). இது தேவபணிக்கு விரோதமாக உபத்திரவங்கள், எதிர்ப்புகள் பெருகின காலமாயிருக்கிறது. தேவ ஜனங்களாகிய நாம் இருதய பாரத்தோடு, கண்ணீர் துளிகளை சிந்தி மன்றாட வேண்டிய அவசியம் உணர்ந்து இம்மடலை தங்களுக்கு சமர்பிக்கிறேன்.

''கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பி வருவான்" (சங்.126:5,6). சங்கீதக்காரன் குறிப்பிடுவதை கவனியுங்கள். கண்ணீரோடு விதைக்கிற விதைகள் கெம்பீரமான அறுவடையைத் தரும் என்கிற சத்தியத்தை கற்றுக் கொள்கின்றோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் அறுப்பு மிகுதி ஆகவே அவரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றே குறிப்பிடுகிறார் (லூக்கா10:2). ஒவ்வொரு விசுவாசிகளின் கண்ணீர் விதை ஜெபம். அது இந்திய தேசத்தை மறுரூபப்படுத்தும். எதிர்ப்புகளும், உபத்திரவங்களும் நன்மையாக மாறும். பெரிய அறுவடை வரும். மிகப்பெரிய எழுப்புதல் இந்திய தேசத்திலும், வடமாநில மிஷனெரி பணியிலும் உண்டாகும் கண்ணீரோடு ஜெபிக்க ஒப்புக் கொடுப்போம்! கண்ணீரின் விதை ஜெபத்திற்கு மிகப்பெரிய ஆசீர்வாதத்தை தேவன் தருவார். தேவன் அருளும் பதிலும் நமக்கு உண்டு. இந்தியாவில் உள்ள சுவிசேஷ எதிர்ப்புகள் மாற, எதிர்க்கிறவர்கள் கர்த்தரின் பட்சத்தில் வர, திறந்த வாசல் தேசம் முழுவதும் உண்டாக, மிஷனரிகள் ஊழியங்கள் குடும்பங்கள் பாதுகாக்கப்பட, வல்லமையாய் பயன்பட, பெரிய ஆத்தும இரட்சிப்பு உண்டாக, மிகப்பெரிய எழுப்புதல் வர, கண்ணீர் துளிகளை நதியளவு இயேசுவின் பாதத்தில் ஊற்றி ஜெபிக்க அன்போடு அழைக்கிறேன் (சங்கீதம் 56:8). திறப்பிலே நின்று கண்ணீரோடே இரவும் பகலும் மன்றாடும் நபராய் எரேமியா தீர்க்கதரிசியைபோல தேசத்திற்காய், வட மாநில மிஷன் ஊழியங்களுக்காய் (எரேமியா 9:1). எழுப்புதலுக்காய் செயல்பட கர்த்தர் கிருபை செய்வாராக!

### 1.இந்தியாவின் தனிநபரின் ஆத்தும இரட்சிப்புக்காய் கண்ணீர் ஜெபம் ஏறெடுப்பவர்கள் தேவை!

(யோவான் 11:35) தனி நபருக்காய் இயேசு கண்ணீர் விட்டு பாரப்படும் மணவாட்டியின் புறா கண்கள் இயேசுவிற்கு இருந்தது. கொடிய ஆத்தும மரணத்தை நோக்கி மக்கள் பயணிக்கிறார்கள். பாவ வாழ்க்கையினால் ஏற்படும் மரணம் (ரோமர் 6:23). பாவத்தின் சம்பளம் ஆத்தும மரணமே. பாவம் செய்கிற ஆத்துமா சாகவே சாகும் (எசே.18:20). தன் பாவங்களை மறைக்கிறவன்

வாழ்வடையமாட்டான் (நீதி.28:13). பாவத்தில் மரித்துப் போன ஆத்துமாவை உயிர்பிக்கத்தான் இயேசு கிறிஸ்து கண்ணீர் சிந்தினார், வேர்வை சிந்தினார், இரத்தம் சிந்தினார் தன்னையே ஊற்றுண்ட கிருபாதார பலியாக அர்ப்பணித்தார். இந்தியாவின் தனி மனிதன், தனி மனுஷி அவருக்குள் தேவ நீதியாகும்படி பாவம் அறியாத அவர் அனைவருக்காக பாவமானார். அகில உலக பாவங்களையும் சுமந்து தீர்த்தார். வெற்றி சிறந்தார். இன்று எந்த மனிதனையும் இரட்சிக்க அவர் ஆயத்தமாய் உள்ளார். லாசருவின் கல்லறையின் சமீபத்தில் இயேசு வடித்த கண்ணீர் லாசருவின் மரித்த சரீரத்தை உயிரோடு எழுப்பியது. இந்திய மக்களுக்குக்காக நாம் வடிக்கும் ஜெப கண்ணீர் துளிகள் இந்திய மக்களை இரட்சிக்கும். மிக பெரிய அறுவடையைத் தரும். நாமும் மகிழ்ந்து களிகூறுவோம்.

## 2.பட்டணங்கள் கிராமங்கள் தேவ சந்திப்பைப்பெற கண்ணீர் விட்டு ஜெபிக்கிறவர்கள் தேவை

லூக்.19:41-44 இல் இயேசு ஊழியம் செய்த நாட்களில் எருசலேம் பட்டணத்திற்காக அதின் சமீபத்தில் வந்தபோது பார்த்து, உணர்ந்து, அழுது மன்றாடினார். உன்னை சந்திக்கும் காலத்தை எருசலேமே நீ அறியாமல் போனாயே என்றார். இந்தியாவின் பட்டணங்களும் கிராமங்களும் இயேசுவை அறியாமல் தானே உள்ளது. சாதாரண ஜெபம் அல்ல இருதய பரத்தோடு, கண்ணீரோடு, அழுது மன்றாடி ஜெபிக்கும் தேவமக்கள் தேவை! ஜெபிக்கிறீர்களா? அல்லது இன்று முதல் ஜெபிக்க தீர்மானியுங்கள் காலத்தின் அவசரத்தை அறிந்து கொள்ளுங்கள். கடைசி கால முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளுங்கள். இந்த காலத்தில் பிரயோஜனமாய் உதவியாய் இருக்கத்தான் தேவன் நம்மை ஆசீர்வதித்து மேன்மைப்படுத்தி வைத்துள்ளார் (எஸ்.4:14). ஆகவே இந்திய பட்டணங்களுக்காய், கிராமங்களுக்காய், குக்கிராமங்களுக்காய் பரிதபிப்போம்! பாரப்படுவோம்! கண்ணீர் சிந்தி ஜெபிப்போம்! (யோனா 4:11). வலது கைக்கும், இடது கைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரத்திற்கும் அதிகமான மக்களுக்காக தேவன் பரிதபித்தார். அது அழிவில் இருந்து இரட்சிப்பாய் மாறிற்று (ஆதி.18:28-32). பத்து நீதிமான்கள் இருந்தால் கூட அழிப்பதில்லை என்றவர் நம் இயேசு. ஆகவே அழுகிறவர்களோடே அழுங்கள் (ரோமர் 12:15) ஜெபியுங்கள். பட்டணங்கள் கிராமங்களை இரட்சிப்பார். எழுப்புதலை நம் கண்கள் காணும்படிச் செய்வார். தேவனுடைய பெரிய இரக்கத்தையும், கிருபையையும், இரட்சிப்பின் ஆசீர்வாதத்தையும் இந்தியா பெற்றுக்கொள்ளும்.

## 3. உலகிலுள்ள தேசங்களுக்காக கண்ணீர் விதை ஜெபம் ஏறெடுப்பவர் தேவை

இயேசு உலக இரட்சகர் என்று வேதம் சொல்கிறது. முழு அகில உலகத்திற்காகவும் இரத்தம் சிந்தி இருக்கிறார். கம்யூனிச தேசங்கள், முகமதிய தேசங்கள், புத்த தேசங்கள், கிறிஸ்தவ தேசங்கள், யூத மத தேசமாகிய இஸ்ரவேல் இப்படி ஏழு கண்டங்களுக்காக கதறி அழுது ஜெபிப்பீர்களா? அது இரட்சிப்பாய் மாறும். உலக நாடுகளின் எழுப்புதலுக்காய் ஊழியர்களை எழுப்புவார். ஆத்துமாக்களை இரட்சிப்பார். உலக எழுப்புதல் உண்டாகும். எபி.5:7-இல் இயேசு மாம்சத்தில் இருந்த நாட்களில் பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணினார். வேண்டுதல் செய்தார். அது கேட்கப்பட்டது. நாமும் ஜெபிப்போம். கண்ணீர் ஜெபம் மாற்றத்தை ஏற்படுத்தும். உலக நாடுகள் இயேசுவை விசுவாசிக்கும். தேவ அன்புக்குள் வரும். ஏசா:40:3-5-ன் படி கண்ணீரின் ஜெபத்தால் பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல மலையும், குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடு முரடானவைகள் சமமாக்கப்படும். அதற்காக ஏசாயா 40:9-ன்படி அறிவிக்கிற ஊழியர்களை சீயோனாகிய சபையில்

எழுப்புவார், இயேசு அறிவிக்கப்படுவார். இதோ உங்கள் தேவன் என்று உலக ஆத்துமாக்கள் இயேசுவை அறிவார்கள்.

**4. இந்தியாவின் எதிர்ப்புகளும், பிரதிகூலங்களும், அநுகூலமாக மாற கண்ணீர் விதை ஜெபம் ஏறெடுப்பவர்கள் தேவை**

அப்:12:1-11 ன்படி ஆதி கால சபை தேவனை நோக்கி ஏறெடுத்த ஊக்கமான கண்ணீர் பிரார்த்தனை (அப்.12:5) ஏரோது ராஜாவால் சபைக்கு ஏற்பட்ட துன்பத்தில் இருந்து அப்போஸ்தலனாகிய பேதுருவை விடுவித்து தமது வல்ல கரத்தின் கிரியையை தேவன் வெளிப்படுத்தினார். தலை துண்டிக்கப்பட வேண்டிய நிலையில் இருந்த தம்முடைய தாசனை விடுவித்தார். தொடர்ந்து பயணிக்க ஊழியம் செய்ய தேவன் பலப்படுத்தினார் (அப்.12:16). அப்போஸ்தலனின் விடுதலை சபையை பிரமிக்க வைத்தது (அப்.12:17). சிறைச்சாலை முடக்கம் நீங்கி வேறொரு இடம் என்று தொடர்ந்து ஊழியம் செய்யும் அநுகூலம் ஏற்பட்டது. தொடர்ந்து தேவ வசனமும், பெரிய இரட்சிப்பும், கிரியைகளும் நடந்தது கண்ணீரோடு ஊக்கமாய் ஜெபித்த ஜெபம் பிரதிகூலங்களை அனுகூலமாய் மாற பண்ணினது ஜெபிப்போம்! ஜெயம் பெறுவோம்! அகில உலக எழுப்புதலை காண்போம்! கண்ணீரோடு ஜெபித்து சுவிசேஷத்தை விதைத்து விசுவாசத்தோடு எதிர்பார்த்தால் கெம்பீரமான அறுவடை இந்திய தேசத்தில், வடமாநிலத்தில், தேவன் தருவார். இந்திய தேசம் இயேசுவை விசுவாசித்து, ஏற்று அவருடையதாக மாறும். தரிசு நிலங்களான பட்டணங்கள், கிராமங்கள் மறுரூபப்பட்டு கிறிஸ்துவின் மகிமையினால் நிரம்பும் சபைகள் ஆயிரம் பதினாயிரமாய் வளரும். எங்கும் பெரிய இரட்சிப்பு உண்டாகும் மனிதர்கள் மந்தையால் கிராமங்கள், பட்டணங்கள் நிரம்பி இருக்கும் (எசே.36:38). தேவன் அதை செய்து முடிப்பார்.ஆமென்! அல்லேலூயா!

**தயவாய் ஜெபியுங்கள்!**
**ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!**

1. தமிழ் பிரதேசம் தாங்கும் 650 திற்கும் மேற்பட்ட மிஷனெரி குடும்பங்களுக்காக.
2. ஊழியம் செய்யும் இடத்தில் சந்திக்கும் பிரச்சனைகளை இயேசு பரிகரிக்கும் படியாக.
3. சத்துருவின் கண் ஊழியர்கள் குடும்பங்கள் மேல் படாமல் கர்த்தர் கிருபையாக பாதுகாக்க.
4. மிஷனெரிகளுக்கு விரோதமாக போடப்படும் வழக்குகள், சிறைச்சாலை அடைப்புகள், பொய்த்து போக தேவன் வெளியே கொண்டு வர.
5. சிறைப் பிடிக்கப்பட்ட மிஷனெரிகளை தேவன் உடனே விடுவித்து வெளியே கொண்டு வர.
6. தேவன் மிஷனெரிகளை வல்லமையாய் பயன்படுத்த.
7. மிஷன் குழுவினர் செல்லும் வட மாநில ஆசீர்வாத ஜெப ஊடுருவல், ஜெப பயணத்தை தேவன் ஆசீர்வதிக்க.
8. வட மாநிலங்களில் ஊழிய ஸ்தலத்தில் இடங்கள் வாங்கப்பட, ஆலயங்கள் கட்டப்பட தேவைகள் சந்திக்கப்பட.
9. தமிழக ஏஜி ஊழியர்கள் விசுவாச மக்கள், செல்லும் வட மாநில ஜெப பயணத்தை தேவன் ஆசீர்வதிக்க.
10. மிஷன் எழுப்புதல் பத்தாண்டு திட்டத்தில் 2030-திற்குள்ளாக புதிய 600 மிஷனெரிகளை தேவன் தமிழக சபையில் எழுப்பித் தர வட மாநிலங்களுக்கு செல்ல.

# ஜெபிக்கும் புருஷராயிருங்கள்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் புருஷர்கள் யாவருக்கும் தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கியத்தின் சார்பில் வாழ்த்துக்கள்.

புருஷர்கள் நீங்கள் மிக முக்கியமானவர்கள். உங்களைக் கொண்டு தேவன் வைத்திருக்கிற திட்டங்களும் பெரியவைகள். உங்கள் தனி ஜெபம், குடும்ப ஜெபம் பெரிய அளவில் பலனை கொண்டுவரும். ஜெபம் ஒரு கிறிஸ்தவனின் உயிர்மூச்சு, ஜெபமில்லையேல் ஜெயம் இல்லை. புருஷர்கள் ஜெபம் செய்கிறவர்களாய் இருக்க வேண்டும்.



**மனைவிக்காய் ஜெபிக்கும் புருஷராயிருங்கள்:** மலடியாயிருந்த தன் மனைவிக்காக ஈசாக்கு கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான். கர்த்தர் அவன் வேண்டுதலைக் கேட்டருளினார். அவன் மனைவி ரெபேக்காள் கர்ப்பந்தரித்தாள் (ஆதி.25:21). இன்றைக்கும் அநேக குடும்பங்களில், கணவனின் சரீரம், அவன் வேலை, வாழ்வில் உயர்வு யாரால் வந்திருக்குமென்றால் மனைவியின் ஜெபத்தால் வந்திருக்கும். ஆனால் ஆண்களில் எத்தனை பேர், தேவனே எனக்கு கொடுத்த மனைவிக்காக உமக்கு நன்றி; என் மனைவியை ஆசீர்வதியும். அவள் சுகவீனமாய் இருக்கிறாள், அவளை குணமாக்கும் என்று ஜெபிக்கிறீர்கள்? சபையின் புருஷரே, ஈசாக்கின் அனுபவம் உங்களுக்கு தேவை. ஒவ்வொரு புருஷனும் தன் மனைவிக்காய், அவளது சரீர பெலவீனங்களுக்காய், அவள் சந்திக்கும் பிரச்சனைகளுக்காய் ஜெபிக்கும் புருஷனாக இருக்க வேண்டும்.

**குடும்பத்திற்காய் ஜெபிக்கும் புருஷராயிருங்கள்:** ஆபிரகாமுக்கு தேவன் வாக்குப் பண்ணின தேசத்திற்கு யாக்கோபு 20 ஆண்டுகளுக்கு பிறகு வருகிறான். ஏசா கொன்றுபோடுவானோ என்று பயப்படுகிறான், வியாகுலப்படுகிறான் (ஆதி.32:7). தன்னிடத்திலிருந்த ஜனங்களையும் ஆடுகளையும் ஒட்டகங்களையும் இரண்டு பகுதிகளாக பிரித்து, ஏசா ஒரு பகுதியின் மேல் விழுந்து அதை முறியடித்தாலும் மற்ற பகுதி தப்பித்துக்கொள்ளும் என்று நினைக்கிறான். ஆகிலும் தன் குடும்பத்தில் யாரையும் எதையும் இழக்க யாக்கோபு தயாராக இல்லை. தேவனை நோக்கி ஏசாவின் கைக்கு தன்னை தப்புவிக்க ஜெபத்தில் மன்றாடினான் (ஆதி.32:9-12-26). நீங்களும் குடும்பத்தின் ஆசீர்வாதத்திற்காய், தேவைகளுக்காய், முன்னேற்றத்திற்காய், பிள்ளைகளின் நல்வாழ்விற்காய் பாரத்தோடு ஜெபியுங்கள். உங்கள் குடும்பத்தை அழிவிலிருந்து காப்பீர்கள்.

**தேசத்திற்காய் ஜெபிக்கும் புருஷராயிருங்கள்:** எசேக்கியேல் தேசத்தின் ஜனத்துக்காய் பெருமூச்சுவிட்டு, இடுப்பு நொறுங்க ஜெபிப்பவன். எசே.21:6-ல் ஆதலால் மனுபுத்திரனே, உன் இடுப்பு நொறுங்கும்படி பெருமூச்சுவிடு; அவர்கள் கண்களுக்கு முன்பாக மனங்கசந்து பெருமூச்சுவிடு; என்றிருக்கிறதே. எசேக்கியேல் திறப்பில் நின்று ஜெபிப்பவன். நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவரையும் காணேன் (எசே.22:30). நாமும் எசேக்கியேலைப் போல தேசத்திற்காய் பெருமூச்சுவிட்டு, முகங்குப்புற விழுந்து, திறப்பில் நின்று ஜெபிக்கிறவர்களாய் மாற வேண்டும். இப்படிப்பட்ட புருஷர்களையே தேவன் தேடுகிறார்.

இன்றைக்கும் நம் தேசத்தில் தலைவிரித்தாடும் பாவத்தின் வல்லமைகள், விக்கிரகங்களின் பெருக்கம், பெருகி வரும் ஒழுக்கக்கேடுகள், குறைந்து கொண்டிருக்கும் மனிதநேயம் இவற்றிற்காய் ஜெபத்தில் போராட வேண்டும். நாம் கேள்விப்படும் வாசிக்கும் செய்திகளை, ஜெபமாக, விண்ணப்பங்களாக, மன்றாட்டுகளாக மாற்றும் புருஷர்களாக நாம் எழும்ப வேண்டும். உங்கள் முழங்காலை தேவனுக்கு முன்பாக முடக்குங்கள். உங்கள் நாவு மற்றவர்களுக்காய் பரிந்துபேசும் நாவாக ஒப்புக்கொடுங்கள். ஜெபித்து ஜெயம் உள்ள புருஷராயிருங்கள்.

Rev.Dr.J. சாமுவேல் ஜெபராஜ்
தலைவர், தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கியம்



# இயேசு தேவனுடைய குமாரன் என்றால், தேவனுடைய மனைவி யார்? என்று கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு


## Rev. ஜேக்கப் இஸ்ரேல்

இயக்குநர், இஸ்லாமியர் ஊழியங்கள்


பதில் : அநேக நேரங்களில் கேள்வி கேட்பவர்கள், தாங்கள் எந்த அறிவோடு கேட்கிறோம் என்றுகூட தெரியாமல் கேட்பது வேடிக்கையாய் இருக்கும். ஆகையால், ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டிய இரண்டு காரியங்களை நாம் முதலில் பார்க்கலாம்.

**1.**தேவன் என்றால் அவர் சகலத்தையும் செய்ய வல்லவர். ஒன்றும் இல்லாமையிலிருந்தும், ஒன்றை உருவாக்கக் கூடியவர். இப்படிப்பட்டவர் தான் தேவன். இந்த அறிவு முதலாவது ஒவ்வொருவருக்கும் தேவை.

**2.**உலகில் முதல் மனிதனை, தேவன் உண்டாக்கினார். அவனை வெறும் மண்ணினால் உண்டாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியில் ஊதினார். அவன் ஜீவ ஆத்துமா ஆனான். அவன் தான் ஆதாம். இவனுக்கு அப்பாவும் இல்லை. அம்மாவும் இல்லை. ஆனாலும் தேவன் உண்டாக்கினாரே! இதுபோல தேவனால் உண்டாக்க முடியும்.

இப்போது கேள்விக்கான பதிலுக்கு போவோம். “இயேசு தேவனுடைய குமாரன்” என்று ஏன் அழைக்கப்பட்டார் என்பதை அறிய, முதலில் தேவன் யார் யாரை எல்லாம் குமாரன் என்று அழைத்தார் என்று பரிசுத்த வேதத்தில் பார்ப்போம்.

**1.**யாத்.4:22-23 “(வச22) அப்பொழுது நீ பார்வோனோடே சொல்ல வேண்டியது என்னவென்றால் இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன். (வச.23) எனக்கு ஆராதனை செய்யும்படி என் குமாரனை அனுப்பிவிடு என்று கட்டளையிடுகிறேன். அவனை விடமாட்டேன் என்பாயாகில் நான் உன்னுடைய குமாரனை, உன் சேஷ்டபுத்திரனைச் சங்கரிப்பேன் என்று கர்த்தர் சொன்னார் என்று சொல் என்றார்.

ஓசியா 11:1 “இஸ்ரவேல் இளைஞனாயிருந்தபோது நான் அவனை நேசித்தேன். எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்”. இஸ்ரவேலுக்கும், தேவனுக்கும் இடையே தகப்பன் மகனுக்கான ஐக்கியம் இருந்தபடியால், தேவன் இஸ்ரவேலை நோக்கி “என்னுடைய குமாரன்” என்று அழைத்தார் என்பதை தான் இந்த வசனங்கள் வெளிப்படுத்தப்படுகிறது.

**2.**யோபு 2:1 “பின்னொரு நாளிலே தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றபோது, சாத்தனும் அவர்கள் நடுவிலே கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றான்”. தேவதூதர்களுக்கும், தேவனுக்கும் இடையே தகப்பன் மகனுக்காக ஐக்கியம் இருந்தபடியால், தேவன் தேவதூதர்களை நோக்கி “புத்திரர்” (குமாரன்) என்று அழைத்தார் என்பதை தான் இந்த வசனம் வெளிப்படுத்துகிறது.

**3.**2சாமு.7:14 ‘‘நான் அவனுக்கு பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பான். அவன் அக்கிரமம் செய்தால், நான் அவனை மனுஷருடைய மிலாற்றினாலும் மனுபுத்திரருடைய அடிகளினாலும் தண்டிப்பேன்”. சாலமோனுக்கும், தேவனுக்கும் இடையே தகப்பன் மகனுக்காக ஐக்கியம் இருந்தபடியால், தேவன் சாலமோனை நோக்கி குமாரன் என்று அழைத்தார் என்பதை தான் இந்த வசனம் வெளிப்படுத்துகிறது.

ஆக இஸ்ரவேல், தேவதூதர்கள் மற்றும் சாலமோன் இவர்கள் எல்லாரும் “குமாரன்”

என்று தேவனால் அழைக்கப்பட்டார்கள் என்பதை மேலே உள்ள வசனங்களில் பார்த்தோம். அதேப்போல தான் பிதாவாகிய தேவனுக்கும் இயேசுவுக்கும் இடையே தகப்பனுக்கும் மகனுக்குமான ஐக்கியம் உள்ளது. இதன் அடிப்படையில் தான் இயேசுவை குமாரன் என்று பிதாவாகிய தேவன் சொல்கிறார்.

ஆனால் வேதத்தில் குமாரன் என்று அழைக்கப்பட்ட மற்றவர்களுக்கும், இயேசுவுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உள்ளது. அது என்னவெனில், மற்றவர்கள் எல்லாரும் சிருஷ்டிக்கப்பட்டவர்கள், இயேசு ஒருவர் மாத்திரம் சிருஷ்டிக்கப்பட்டவர் இல்லை. பிதாவாகிய தேவன் எப்பொழுது இருக்கிறாரோ, அப்பொழுதே இயேசுவும் இருக்கிறார். அதை தான் கீழே உள்ள வசனம் வெளிபடுத்துகிறது.

யோவா 1:1-2 (வச 1) ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. (வச 2) அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.

பழைய ஏற்பாட்டில் அநேக இடங்களில், "இயேசு" தேவனுடைய குமாரன் என்று தீர்க்கதரிசனமாய் எழுதப்பட்டிருக்கிறது. அது நிறைவேறும்படியாக இயேசு தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்பட்டார்.

**1**. சங்.2:1-2 (வச1) ஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதாக்காரியத்தைச் சிந்திப்பானேன்? (வச 2) கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைப்பண்ணி... (இந்த சங்கீதம் தாவீது எழுதியது. இது அப்.4:25-28 வசனங்களில் நிறைவேறுகிறதை கீழே பார்க்கலாம்)

அப்.4:25-28 (வச25) புறஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதாக்காரியத்தைச் சிந்திப்பானேன் என்றும், (வச26) கர்த்தருக்கு விரோதமாகவும் அவருடைய கிறிஸ்துவுக்கு விரோதமாகவும் பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய் கூட்டம் கூடினார்கள் என்றும், தேவரீர் உம்முடைய தாசனாகிய தாவீதின் வாக்கினால் உரைத்தீரே (வச27) அந்தப்படி உம்முடைய கரமும் உம்முடைய ஆலோசனையும் முன்குறித்தவைகள் யாவையும் செய்யும்படி, (வச. 28) ஏரோதும் பொந்தியுபிலாத்தும், புறஜாதிகளோடும் இஸ்ரேல் ஜனங்களோடுங்கூட, நீர் அபிஷேகம்பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாய், மெய்யாகவே கூட்டம் கூடினார்கள்.

**2**. சங்.2:7 தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன்: கர்த்தர் என்னை நோக்கி நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்: (இந்த வசனத்தின் நிறைவேறுதலை கீழே பார்க்கலாம்).

அப்.13:32-33 நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிபித்தேன் என்று இரண்டாம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறபடியே, (வச33) இயேசுவை எழுப்பினதினாலே தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தத்தை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினார் என்று நாங்களும் உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கிறோம். (ஜெநிப்பித்தேன் என்பதற்கு உரிய அர்த்தம்: English-Raised up Jesus again-KJV; Tamil-இயேசுவை மறுபடியும் எழுப்பினார்).

இப்படி சில பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும்படியாக, புதிய ஏற்பாட்டில் இயேசு குமாரனாக வெளிப்பட்டார். இந்த காரியங்கள் யூதர்களுக்கு நன்றாக தெரியும். ஆகையால் தான் இப்படிப்பட்ட கேள்விகளை யூதர்கள் எழுப்பவில்லை. ஆக, இயேசு குமாரனாய் வருவதற்கு, பிதாவாகிய தேவனுக்கு மனைவி தேவையில்லை என்பது இப்போது புரிந்திருக்கும் என்று நம்புகிறேன்.

எல்லா புகழும் இறைவனாகிய இயேசு ஒருவருக்கே!!!

# நான்கு சிறிய உயிரினங்களிடமிருந்து கற்றுக்கொள்ளும் மகத்தான ஞானம்

"பூமியிலே சிறியவைகளாயிருந்தும் மகா ஞானமுள்ளவைகள் நான்கு உண்டு" (நீதிமொழிகள் 30:24-28).



நீதிமொழிகள் 30-ஆம் அதிகாரத்தில் ஆகூர் நம்முடைய கவனத்தை நான்கு சிறிய உயிரினங்களின் மீது திருப்புகிறார். அவை உருவத்தில் சிறியவையாக இருந்தாலும், ஞானத்தில் பெரியவையாக இருக்கின்றன. மனிதர்களுக்குப் பெரிய பாடங்களை கற்பிப்பதற்காக தேவன் பல நேரங்களில் சிறிய மற்றும் எளிய படைப்புகளைப் பயன்படுத்துகிறார். ஞானம் என்பது ஒருவரின் பலம், கல்வி, செல்வம் அல்லது சமூக அந்தஸ்தினால் அளவிடப்படுவதில்லை; மாறாக, தேவனுடைய கொள்கைகளின்படி வாழ்வதன் மூலம் வெளிப்படுகிறது என்பதை இவ்வுயிரினங்கள் நமக்கு நினைவூட்டுகின்றன. ஒவ்வொரு விசுவாசிக்கும் அன்றாட வாழ்க்கையில் பயன்படும் நான்கு முக்கியமான குணாதிசயங்களை இவை கற்பிக்கின்றன: ஆயத்தம், அடைக்கலம், ஐக்கியம், விடாமுயற்சி (Preparation, Protection, Partnership and Perseverance).

**முதலாவதாக,** எறும்பு ஆயத்தத்தின் ஞானத்தை நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. நீதிமொழிகள் 30:25-ல், "எறும்பு அற்பமான ஜந்து; ஆனாலும் கோடைக்காலத்திலே தங்கள் ஆகாரத்தைச் சேர்த்து வைக்கும்'' என்று கூறப்பட்டுள்ளது. எறும்புகள் இன்றே நாளைக்காக ஆயத்தப்படுவதின் முக்கியத்துவத்தை அறிந்திருக்கின்றன. அவை சாதகமான காலத்தில் உணவைச் சேகரிக்கின்றன; குளிர்காலம் வந்தபிறகு தொடங்குவதில்லை. அதுபோல ஞானமுள்ளவர்கள் எதிர்காலத்தை நோக்கி சிந்திக்கிறார்கள். மாணவர்கள் தேர்வுக்காக ஆயத்தமாவார்கள்; தொழிலாளர்கள் தங்களுடைய பொறுப்புகளுக்காக தயாராகிறார்கள்; குடும்பங்கள் எதிர்பாராத தேவைகளுக்காக சேமிக்கின்றன; விசுவாசிகள் சோதனைக் காலங்களுக்கு முன்பே தங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை பலப்படுத்துகிறார்கள். வாய்ப்புகள் என்றென்றும் நீடிக்காது என்பதை உணர்வதே ஞானமான ஆயத்தமாகும். ஜெபம், வேதவாசிப்பு மற்றும் விசுவாசத்தில் வளர்ச்சி ஆகியவை ஆவிக்குரிய ஆயத்தத்தின் முக்கிய பகுதிகளாகும். யோசேப்பு பஞ்சம் வருவதற்கு முன்பாக எகிப்தை ஆயத்தப்படுத்தியதுபோல, ஞானமுள்ள விசுவாசிகள் நாளைய சவால்களுக்காக இன்றே தயாராகிறார்கள்.

**இரண்டாவதாக,** குழிமுயல் (Rock Badger) அடைக்கலத்தின் ஞானத்தை நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. நீதிமொழிகள் 30:26-ல், 'குழிமுயல்கள் பெலனில்லாத உயிரினம். ஆனாலும் கன்மலையிலே தங்கள் வீட்டைக் கட்டுகின்றன' என்று வாசிக்கிறோம். இந்தச் சிறிய உயிரினங்களுக்கு இயற்கையாக அதிக பலம் இல்லை. இருப்பினும் அவை கன்மலைகளின் அருகில் தங்கி பாதுகாப்பைப் பெறுகின்றன. தங்களுடைய பலவீனத்தை அறிந்து சரியான இடத்தில் பாதுகாப்பைத் தேடுவதில்தான் அவற்றின் ஞானம் உள்ளது. இதுவே ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரு முக்கியமான பாடமாகும். பலர் தங்கள் சொந்த திறமைகள், செல்வம் அல்லது அனுபவத்தின் மீது நம்பிக்கை வைக்கிறார்கள். ஆனால் அவை எல்லாம் ஒரு நாள் தோல்வியடையலாம். உண்மையான பாதுகாப்பு தேவனிடமே உள்ளது. சங்கீதக்காரன், "கர்த்தர் என் கன்மலையும் என் கோட்டையும்" (சங்கீதம் 18:2) என்று கூறுகிறார். வாழ்க்கையில் சோதனைகள், கஷ்டங்கள், ஏமாற்றங்கள் மற்றும்

நிச்சயமற்ற சூழ்நிலைகள் வரலாம். ஆனால் தேவனோடு நெருக்கமாக இருப்பவர்கள் நிலைத்தன்மையையும் சமாதானத்தையும் அனுபவிப்பார்கள். ஞானம் என்பது நாம் பலமுள்ளவர்கள் என்று நடிப்பதல்ல; உண்மையான பலம் எங்கே இருக்கிறது என்பதை அறிந்திருப்பதே ஞானமாகும்.

**மூன்றாவதாக,** வெட்டுக்கிளி ஐக்கியத்தின் ஞானத்தை கற்பிக்கிறது. நீதிமொழிகள் 30:27-ல், "வெட்டுக்கிளிகளுக்குத் தலைவர் இல்லை; ஆனாலும் அவை எல்லாம் ஒழுங்காகப் புறப்படுகின்றன'' என்று கூறப்பட்டுள்ளது. வெட்டுக்கிளிகள் குறிப்பிடத்தக்க ஒற்றுமையுடனும் ஒத்துழைப்புடனும் செயல்படுகின்றன. ஒவ்வொரு அசைவையும் வழிநடத்தும் வெளிப்படையான தலைவர் இல்லாவிட்டாலும், அவை ஒரே நோக்கத்துடன் முன்னேறுகின்றன. இது வாழ்க்கைக்கான ஒரு வல்லமையான கொள்கையை நமக்கு கற்பிக்கிறது. தேவன் மனிதர்களை தனிமையில் வாழும்படி படைக்கவில்லை. குடும்பங்கள் ஒத்துழைப்பால் வளர்கின்றன; சபைகள் ஐக்கியத்தால் வலுவடைகின்றன; சமுதாயங்கள் ஒன்றிணைந்து செயல்படுவதால் முன்னேறுகின்றன. "ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்" (பிரசங்கி 4:9) என்று வேதாகமம் கூறுகிறது. சுயநலம், போட்டி, பொறாமை மற்றும் பிரிவினை பல பிரச்சனைகளுக்கு காரணமாகின்றன. ஆனால் ஐக்கியம் செயல்திறனைப் பெருக்குகிறது. ஆரம்ப சபை ஒன்றுகூடி ஜெபித்து, ஆராதித்து, ஊழியம் செய்ததால் தேவனுடைய ஆசீர்வாதத்தை அனுபவித்தது. வீட்டிலோ, பணியிடத்திலோ, சபையிலோ அல்லது சமுதாயத்திலோ நாம் ஒன்றாக செயல்படும்போது தனித்தனியாகச் செய்ய முடியாத காரியங்களையும் சாதிக்க முடியும்.

**நான்காவதாக,** சிலந்தி விடாமுயற்சியின் ஞானத்தை நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. நீதிமொழிகள் 30:28-ல், "தன் கைகளினால் வலையைப் பின்னி, அரசர் அரமனைகளிலிருக்கிற சிலந்திப் பூச்சி" என்று கூறப்பட்டுள்ளது. உருவத்தில் சிறியதாகவும் பலவீனமாகவும் இருந்தாலும், சிலந்தி அசாதாரணமான விடாமுயற்சியைக் கொண்டுள்ளது. அதன் வலையை அழித்துவிட்டால் மீண்டும் கட்டுகிறது. கீழே விழுந்தால் மீண்டும் ஏறுகிறது. அதன் வெற்றி அதன் பலத்தில் அல்ல, அதன் உறுதியான முயற்சியில் இருக்கிறது. இது ஒவ்வொரு விசுவாசிக்கும் மிக முக்கியமான பாடமாகும். வாழ்க்கையில் தோல்விகள், தடைகள், ஏமாற்றங்கள் மற்றும் பின்னடைவுகள் ஏற்படலாம். வெற்றி பெறுபவர்கள் எப்போதும் அதிக திறமையுடையவர்களாக இருக்க வேண்டியதில்லை; ஆனால் அவர்கள் விடாமல் முயற்சி செய்பவர்களாக இருப்பார்கள். "நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக" (கலாத்தியர் 6:9) என்று வேதாகமம் நம்மை ஊக்குவிக்கிறது. யோசேப்பு சிறையிலிருந்து அரண்மனைக்குச் சென்றார்; தாவீது மேய்ப்பரிடமிருந்து ராஜாவானார். அவர்களின் வெற்றியின் ரகசியம் விடாமுயற்சிதான். சிலந்தி நமக்கு நினைவூட்டுவது என்னவென்றால், உண்மையுள்ள நிலைத்த முயற்சி, திறமையால் மட்டுமே அடைய முடியாத உயரங்களை அடையச் செய்யும் என்பதாகும்.

இந்த நான்கு சிறிய உயிரினங்கள் வாழ்க்கைக்கான நிலையான உண்மைகளை நமக்குக் கற்றுக்கொடுக்கின்றன. எறும்பு ஆயத்தத்தை, குழிமுயல் தேவனுடைய அடைக்கலத்தை, வெட்டுக்கிளி ஐக்கியத்தின் வல்லமையை, சிலந்தி விடாமுயற்சியை கற்பிக்கின்றன. உருவத்தில் சிறியவைகளாக இருந்தாலும், ஞானத்தில் மகத்தானவைகளாக இருக்கின்றன. இவற்றின் பாடங்களை நம் வாழ்க்கையில் கடைப்பிடித்தால், நம் விசுவாசத்தில் பலப்படுவோம், நம் முடிவுகளில் ஞானமுள்ளவர்களாவோம், மேலும் தேவன் நமக்காக வைத்திருக்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதில் பயனுள்ளவர்களாக இருப்போம். உண்மையாகவே, தேவன் தம்முடைய மிகச் சிறிய படைப்புகளின் மூலமாகவும் மகத்தான பாடங்களைக் கற்பிக்கிறார்



# தமிழ்பிரதேச மத்திய வாலிபர் ஊழியம்

**Rev. S. கோபிநாத்**

President, Christ's Ambassadors

## "ARISE MIGHTY WARRIOR"

## பராக்கிரமசாலியே எழுந்திரு

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு, ஆசீர்வாதமாக கானானில் வாழ்ந்து வந்த இஸ்ரவேலர் தேவனை மறந்து (பாகால், அஷேரா) அந்நிய தெய்வங்களை வணங்கியதால் சொந்த தேசத்திலே உழைப்பின் பலனையும், ஆசீர்வாதத்தையும் அனுபவிக்க முடியாமல் உயிருக்கு பயந்து சொந்த வீட்டை விட்டு குகைகளிலும், கெபிகளிலும் ஒளிந்து வறுமையிலும், பயத்திலும் வாழ்ந்து வந்தனர். இந்த சூழ்நிலையில் கிதியோன் தைரியமாக தாங்கள் விதைத்த கோதுமையை அறுவடை செய்து மீதியானியரின் கைகளுக்குத் தப்புவிக்கும்படி துரிதமாக செயல்பட்டான். கர்த்தருடைய தூதனானவர் கிதியோனை சந்தித்து "பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" என்றார்.

இஸ்ரவேல் ஜனங்களை விடுவித்து அவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்படி கிதியோனை தெரிந்துகொண்டது போல வாலிபர்களாகிய உங்களை பயத்தோடும், மன அழுத்தத்தோடும், அடிமைத்தனத்திருக்கும் வாலிபர்களை விடுவித்திட, தேசத்திற்கு ஆசீர்வாதமாயிருக்கும்படி **"பராக்கிரமசாலியே எழுந்திரு"** என்று தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார். பராக்கிரமசாலியாகிய நாம் எதில் எழுந்திருக்க வேண்டும் என்று தியானிப்போம்.

### RISE ABOVE INFERIORITY:
### தாழ்வு மனப்பான்மையிலிருந்து எழுந்திரு:

கிதியோனை தேவன் சந்தித்தபோது, அவனை பராக்கிரமசாலியே என்று அழைத்தபோது

- தேவன் எங்களோடு இல்லையே!.
- வாழ்க்கையில் ஏன் இந்த நிலை (பயந்து ஒளிந்துகொள்ளும் நிலை, போராட பெலன் இல்லை).
- பிதாக்கள் சொன்ன அற்புதங்கள் எங்கே?
- மீட்டுக்கொண்டு வர யாரும் இல்லையா? (ஒப்புக்கொடுக்கப்பட்டோமே).

இந்த நிலையை (நியா.6:13) வெளிப்படுத்தினான். அவன் சந்தித்த பிரச்சனைகளும், சூழ்நிலைகளும், போராட்டமும் மன அழுத்தத்துக்குள் அவனைக் கொண்டு சென்றது. தனக்குள் இருந்த பெலனையும், திறமையையும் மறந்து தேவனுடைய வார்த்தையையும் விசுவாசிக்காமல் ஒருவித மன அழுத்தத்திற்குள் வாழ்ந்து வந்தான். கிதியோனை கர்த்தர் தைரியப்படுத்தினார், பயன்படுத்தினார்.

எனவே, பராக்கிரமசாலிகளாகிய நீங்கள் சூழ்நிலைகளை பார்க்காமல் தேவனுடைய வார்த்தையைப் பாருங்கள், விசுவாசியுங்கள். தாழ்வு மனப்பான்மையையும், பயத்தையும் விட்டுவிட்டு வெளியே வாருங்கள். கர்த்தர் உங்களை பராக்கிரமசாலியாக உருவாக்குகிறார். அல்லேலூயா!

**Faith takes God at his word.** விசுவாசம் என்பது தேவனுடைய வார்த்தையை அப்படியே நம்புவதாகும் - **D.L. Moody.** கர்த்தரையே பற்றிக்கொண்டிருங்கள்.

## RISE ABOVE YOUR INSECURITY:
## பாதுகாப்பற்ற உணர்வில் இருந்து எழுந்திரு:

கிதியோன் தன்னைக் குறித்தும், குடும்பத்தைக் குறித்தும் தான் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறேன் என்ற அவனது உணர்வை நியாயாதிபதிகள் 6:15-ல் காண முடிகிறது.

❖ எளிய குடும்பம் ❖ நான் சிறியவன் ❖ என்னால் வெற்றி மேற்கொள்ள முடியாது

பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறேன் என்று தயங்கினான். தன்னால் எதையும் சாதிக்கவோ, வெற்றியடையவோ முடியாது என்று எண்ணம் கொண்டிருந்தான். ஆனால் தேவனாகிய கர்த்தர் அவனோடே இருக்கிறேன் என்று உறுதியளித்தார். நான் உன்னுடன் இருக்கிறேன் என்ற கர்த்தருடைய வார்த்தை எவ்வளவு மேன்மையானது, வல்லமையானது. உங்களைக் குறித்த நிலையை சொல்லி கேள்வி கேட்காமல் சர்வ வல்லமையுள்ளவரை பற்றிக்கொள்ளுங்கள். அவர் நம்மைப் பாதுகாக்கிறார்.

அநேகம் பேரைக் கொண்டாகிலும், கொஞ்சம் பேரைக் கொண்டாகிலும் இரட்சிக்க கர்த்தருக்கு தடையில்லை. ஏசாயா 14:6 கர்த்தர் உங்களுடன் கூட இருந்து பெரிய காரியங்களை செய்வார். எனக்கு யாரும் இல்லை, நான் சிறியவன், ஞானம் மற்றும் பெலனில்லாதவன் என்ற மனப்பான்மையை விட்டு வெளியே வாருங்கள். கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் (சங்.138:8) என்ற விசுவாசத்தோடு அவரை பற்றிக்கொள்ளுங்கள்.

**Over come your insecurity and step out into your calling.**

## FREEDOM FROM A DOUBTFUL MINDSET :
## சந்தேக மனப்பான்மையிலிருந்து விடுதலை:

கிதியோனிடம் தேவன் பேசினாலும் அவனுடைய மனதில் சந்தேகம் இருந்தது. (நியாயாதிபதிகள் 6:17).

❖ நீர் எங்கள் ஆண்டவரா? ❖ அடையாளம் வேண்டும்

சந்தேகம் தேவனுடைய வல்லமையையும், அற்புதங்களையும் காண முடியாமல் தடை செய்கிறது. சந்தேகம் பயத்தை ஏற்படுத்தியது, அடையாளத்தை தேடியது. இவைகளிலிருந்து தேவன் கிதியோனை வெளியே கொண்டு வந்தார். தன்னை காண்பித்தார், சமாதானம் கொடுத்தார். பலிபீடத்தை கட்டி தொழுது கொண்டான். தாழ்வு மனப்பான்மையிலிருந்தும், பாதுகாப்பற்ற மனநிலையிலிருந்தும், சந்தேக மனப்பான்மையிலிருந்தும் தேவன் அவனை வெளியே கொண்டு

வந்தார். கர்த்தரின் பட்டயம் கிதியோனின் பட்டயம் என்று முழக்கமாக முழங்கி மீதியானியரை முறியடித்து, இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆசீர்வாதமாக மாற்றினார். கிதியோனின் பலவீனமான தருணங்களிலும் தேவன் அவனது பயத்தைப் போக்கி விசுவாசத்தில் வளரச்செய்து அவன் மூலம் பெரிதான மீட்பை உண்டுபண்ணினார். எனவே,

- தாழ்வு மனப்பான்மையிலிருந்து
- பாதுகாப்பற்ற மனநிலையிலிருந்து
- சந்தேக மனநிலையிலிருந்து எழுந்திருங்கள்.

பராக்கிரமசாலிகளாகிய உங்களோடு கர்த்தர் உண்டு. அவர் வார்த்தை உண்டு. உங்கள் மூலம் உலகத்திற்கு வெற்றி, விடுதலை உண்டு. உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்! எழுந்திருங்கள் இயேசுவுக்காக! கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

## Burn! Learn! Earn! Turn!

There is a call to all the believers to burn, learn, earn and turn!

**BURN!** John the Baptist was a **burning** and shining light(John 5:35). If there is anything we need today, it is revival **fire**. Fire to stir our cold spiritual life! Fire to drive us on to our knees! Untold millions today are dying untold because we lack the fire of the Holy Ghost. Let us be freshly baptized with fire to burn out for God.

**LEARN!** The Bible says, “Jesus increased in **wisdom**” (Luke 2:52). Timothy was a young man. Apostle Paul's counsel to him was, “**Study** to show thyself approved unto God” (2 Tim. 2:15). Set apart a time every day for the constructive study of God's Word. Let the Bible be your delight. Read also sound spiritual books especially the biographies of pioneer missionaries and great men of God.

**EARN!** Earning, like learning, needs high spiritual motivation. Earn all you can and give all you can! The Bible condemns earning for keeping. Let us EARN TO GIVE. Jesus said, “It is more blessed to give than to receive” (Acts 20:35). Give according to your income lest God makes your income according to your giving! Not how much of my money will I give to God, but how much of God's money will I keep for myself ?

**TURN!** Burn. Learn. Earn. All to TURN men and women to Christ! We are called to turn the hearts of people to be tuned to God. We should be found constantly at it. Today's world is yet to call us as, “these that have **turned** the world upside down!”(Acts 17:6).

**Source: Youth Revival Letters**



# இதை நினைத்து புருஷனாயிருங்கள்

(பகுதி 7)

## Remember this, and Show yourselves MEN


**Rev.R.தாசையா**

தேனி மண்டல தலைமைப் போதகர்


### அத்தியாயம் - 4
### தகப்பன் என்னும் நல்ல புருஷராயிருங்கள்

புருஷனானவன் குடும்பத்திற்கு தலையாக இருந்து குடும்பத்தை நன்றாய் நடத்தி, தன் பிள்ளைகளை நல்லொழுக்கம் உள்ளவர்களாக கீழ்ப்படிய பண்ணுகிறவனாய் இருக்க வேண்டும் என்றும், ஒருவன் தன் குடும்பத்தை நன்றாக நடத்த அறிந்திருந்தாலே அவன் தேவனுடைய சபையை விசாரிப்பதற்கான அடிப்படை தகுதி என்பதாக 1 தீமோ.3:4,5-ம் வசனங்களில் வாசிக்கிறோம். இந்த வசனம் ஆவிக்குரிய வளர்ச்சி அடைந்த அல்லது முதிர்ந்த அனுபவம் உடைய புருஷர்கள் தங்கள் வீடுகளில் அவர்கள் வாழ்ந்த விதத்தை தெளிவுபடுத்துகிறது.

**தன் குடும்பத்தில் ஒரு தகப்பன் எவ்வாறு செயல்படுகிறார் என்பதும் அவருடைய நடத்தை எப்படியிருக்கிறது என்பதைப் பொறுத்தே மரியாதையும் கீழ்ப்படிதலும் உள்ள பிள்ளைகள் குடும்பத்தில் எழும்புவார்கள்.** தங்கள் குடும்பத்தை நன்முறையில் நடத்துவது புருஷர்களின் பொறுப்பாகும். கிறிஸ்து சபைக்கு தலையாய் இருக்கிறது போல புருஷனும் குடும்பத்திற்கு தலையாக இருக்கிறான் (எபேசியர் 5:23). சரீரம் சரியாக இயங்க தலை அவசியமாகிறது போல குடும்பம் சரியாக இயங்க புருஷன் சரியாக செயல்பட வேண்டும். குடும்பத்தில் நம் பங்கு இல்லாத அளவிற்கு நாம் மிகவும் ''ஆவிக்குரியவர்கள்'' போல காட்டிக்கொள்ளக்கூடாது. இன்னொரு விதத்தில் சொல்ல வேண்டுமானால், குடும்பத்தில் ஒரு புருஷனாக நாம் செய்ய வேண்டிய கடமையை செய்யாமல் தட்டிக் கழிப்பதற்கு ஒரு சாக்கு போக்காக ஆவிக்குரிய காரியங்களை பயன்படுத்தக்கூடாது. அது தீமையை விளைவிக்கும்.

வேதத்தில் குறிப்பிட்டுள்ளபடி, குடும்பத்தின் தலையாக இருக்கும் புருஷன் தன் குடும்பத்தின் பாதுகாவலராக, இறுதி முடிவு எடுப்பவராக, பொறுப்பு வகிக்கிறார் (1கொரிந்தியர் 11:3; ஆதியாகமம் 31:32). தேவனின் பிரதிநிதியாக செயல்படும் தகப்பன் தன் பிள்ளைகளுக்கு தேவனின் கட்டளைகளை கற்பிக்கும் ஆசானாக செயல்படுவதை வேதம் அறிவுறுத்துகிறது (எபேசியர் 6:4; உபாகமம் 6:6,7). ஆபிரகாம் தன் பிள்ளைகளுக்கும் தனக்கு பின்வரும் தன் வீட்டாருக்கும் நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து கர்த்தருடைய வழியை காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்று தேவன் அறிந்திருந்தார் (ஆதியாகமம் 18:19). **பிள்ளைகளுக்கு போதனை வீட்டிலிருந்து துவங்க வேண்டும். அதை தகப்பன் முன்னெடுக்க வேண்டும் என்பதை வேதம் வலியுறுத்துகிறது.** ஒரு தேவபக்தியுள்ள தகப்பன் தன் பிள்ளைகளுக்கு எப்படி இருக்க வேண்டும் என்று இந்த அத்தியாயத்தில் தியானிப்போம்.

#### தேவைகளை பூர்த்தி செய்யும் தகப்பன்

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே (தகப்பனே). இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும். எங்கள் அன்றாட உணவை நாள்தோறும் எங்களுக்குத் தாரும் (மத்தேயு 6:11; லூக்கா 11:3).

கெட்டழிந்தமகன் திருந்தி, திரும்பி வந்த போதே வஸ்திரம், பாதரட்சை, சந்தோஷப்படுத்தும் காரியத்தை தகப்பன் செய்தான் என்றால் (லூக்கா 15:22-25), உங்கள் நல்ல பிள்ளைகளுக்கு இதை விட அதிகமாக செய்ய வேண்டுமே. தகப்பன் தன் பிள்ளைகள் கேட்பதை, தேவையை அறிந்து, திரட்சியானதை தருகிறான் (லூக்கா 11:11-12). **ஆபிரகாம்** தனக்கு உண்டான யாவையும் ஈசாக்குக்கு கொடுத்தான். மறுமனையாட்டியின் பிள்ளைகளுக்கு நன்கொடை கொடுத்தான் (ஆதி.25:5). **யாக்கோபு** தன் பிள்ளைகளுக்கு கொடுத்தான். யோசேப்புக்கோ அதிக பங்காகக் கொடுத்தான் (ஆதி.48:22).

**ஒரு தகப்பன், தன் பிள்ளைகளின் படிப்பு, எதிர்கால வாழ்வு, திருமணம், வேலை வாய்ப்பு இவைகளை உண்டாக்கி தருவதில் அக்கறை காட்டவேண்டும்.** தகப்பன் தன் பிள்ளைகளின் நல்வாழ்வை விரும்புவான். **தாவீது** தன் மகன் அப்சலோமின் நல்வாழ்வை விரும்பினான். அப்சலோமுக்கு எந்தத் தீங்கும் வந்துவிடக்கூடாது என்று நினைத்து, அவனை மெதுவாய் நடத்துங்கள் என்றான் (2சாமு.18:5,33;19:4). ஈசாக்கு நான் மரணம் அடையும் முன்னே நான் உன்னை ஆசீர்வதிக்க வேண்டும் என்று ஏசாவிடம் கூறினான் (ஆதி.27:1-4). இயேசுவும் உங்களுக்கு இன்னது தேவை என்று உங்களது பரமபிதா **(தகப்பன்)** அறிந்திருக்கிறார். பிள்ளைகளுக்கு என்ன தேவை என்பதை அந்தந்த காலத்தில், அந்தந்த நேரத்தில் அறிய வேண்டும். முந்தி பிள்ளைகள் சாப்பிடட்டும் என்றார் (மத்தேயு 6:32; மாற்கு 7:27).

**பிள்ளைகள் நலனே நமது நலன்!!**

### பாதுகாப்பை உறுதி செய்யும் தகப்பன்

இயேசுவாகிய குழந்தைக்கு அபாயம் வருகிறது என்று தகப்பனாகிய யோசேப்புக்கு தேவ தூதனால் தெரிவிக்கப்பட்டபோது இயேசுவை பாதுகாக்க யோசேப்பு எடுத்துக்கொண்ட முயற்சியை பார்க்க முடிகிறது (மத்.2:13-15). இயேசுவின் பெற்றோர் இயேசுவைத் தேடினார்கள் (லூக்கா 2:41-48). நமது பிள்ளைகள் அபாயம் நிறைந்த உலகில் வாழ்கிறார்கள். பள்ளியில், கல்லூரியில், வேலை ஸ்தலத்தில், வெளி உலகத்தில், கெட்ட நண்பர்கள் இவைகளால் கெட்டுப் போகாதிருக்க, அழிவை அடையாதிருக்க, பிள்ளைகளை கண்காணிக்க வேண்டும். இத்தகைய அபாயங்களுக்கு தப்பும் வழியை சொல்லித் தரவேண்டும். இதற்காக **உங்கள் பிள்ளைகளோடு நேரம் செலவிடும் தகப்பனாக இருக்கிறீர்களா..?** பிள்ளைகளோடு தங்கியிருக்கும் தகப்பன் (லூக்கா 11:7). ரெபேக்காள் தன் குமாரனாகிய யாக்கோபுக்கு ஒரு விபரீதம் வரப்போகிறது என்பதை அறிந்தவளாய் யாக்கோபை தப்புவிக்க வழியை சொல்லித் தந்தாள் (ஆதி.27:44).

மோசேயின் தகப்பன் அம்ராம் தன் மகனுக்கு அழிவு வருகிறதை அறிந்து, மோசேயை பாதுகாக்க பேழை என்கிற நாணற் பெட்டியை செய்து பாதுகாத்தான். மோசே பிறந்தபோது அவனுடைய தாய் தகப்பன்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே, ராஜாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல் அவனை மூன்று மாதம் ஒளித்து வைத்திருந்தார்கள் (எபிரெயர் 11:23). இதன் பலனாக பின் ஒரு காலத்தில் மோசேயின் மூலம் தேவனின் திட்டம் நிறைவேறியது.

### நேசத்தை வெளிப்படுத்தும் தகப்பன்

பிதா, இயேசுவாகிய குமாரனை “இவர் என் நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன்” என்று இயேசுவின் மேல் உள்ள நேசத்தை தகப்பனாகிய பிதா

காட்டினார் (மத்தேயு 3:17;17:5; 2 பேதுரு 1:17,18). ஆபிரகாம் தன் குமாரனாகிய ஈசாக்கை நேசித்தான் (ஆதி.22:2). யாக்கோபு தன் மகனாகிய யோசேப்பை நேசித்ததால் அவன் பலவர்ண அங்கியை கொடுத்தான் (ஆதியாகமம் 37:3,4). யோசேப்பை யாக்கோபு நேசிக்கிறதை தனது கிரியை மூலம் காட்டினான் (யாக்கோபு 2:17,18).

யாக்கோபுக்கு தன்மகன் யோசேப்பின் மேல் நேசம், அன்பு, இருந்ததால் தான் யோசேப்புக்கு ஏற்பட்ட அபாயத்தைக் கண்டு வேதனைப்பட்டான். நீங்கள் உங்கள் பிள்ளைகளை நேசிக்கிறீர்கள் என்பதை, நீங்கள் அவர்களுக்காக, அவர்களுக்கு ஏற்பட்ட அபாயத்துக்காக கவலைப்படுகிறீர்கள் என்பதை, உங்கள் முகத்தில், பாவனையில், சோகத்தில் அல்லது உற்சாகத்தில் காட்டி பிள்ளைகளுக்கு புரிய வையுங்கள் (ஆதியாகமம் 37:31-35). எல்லாவற்றையும் இழந்து, கெட்டு, நாசப்படுத்திய மகனாக இருந்தாலும், மனம் திரும்பி வந்த மகனை கண்ட தகப்பன் மனதுருகி, ஓடி, அவன் கழுத்தை கட்டிக்கொண்டு, அவனை முத்தம் செய்தானே (லூக்கா 15:11-14;20-24). **காரணம்: அன்பு, சிநேகம்.** பிள்ளைகள் செய்த தவறுகளை சொல்லிக் காட்டிக்கொண்டே இராதேயுங்கள். பிதாக்களே உங்கள் பிள்ளைகள் திடனற்று போகாதபடி அவர்களுக்கு கோபமூட்டாதீர்கள் (கொலே.3:21). பிதாக்களே நீங்களும் உங்கள் பிள்ளைகளை கோபப்படுத்தாமலும், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும், அவர்களை வளர்ப்பீர்களாக (எபேசியர் 6:4). தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனை சிட்சிக்கிறான் (நீதிமொழிகள் 3:12). **சிட்சை வார்த்தையில் வெளிப்படும், சிறு தண்டனையாக தொடரும், மனதில் காயத்தை, வலியை ஏற்படுத்தும், ஆனால் பொல்லாப்பில் இருந்து வெளிவரச் செய்யும்** (எபிரெயர் 12:5-8).

நாம் ஒவ்வொருவரும் தேவனுக்கு பிள்ளைகள். நம்மை அவர் நேசிப்பதால் சிட்சிக்கிறார். நாம் பிள்ளைகளுக்கு நல்ல தகப்பனாக இருந்தால், நாம் அவர்களை நேசிக்கிறோம் என்பதை சிட்சையின் மூலம் காட்ட வேண்டும். (நீதிமொழிகள் 20:11; 22:6;15;23:13;29:15,17) எனவே **நேசத்தை, அன்பை, அரவணைப்பின் மூலம் காட்டுங்கள், தேவைக்கு உதவி செய்வதன் மூலம் காட்டுங்கள், கர்த்தருக்கு ஏற்ற வளர்ப்பின் மூலம் காட்டுங்கள். குற்றத்தை, தவறை, மன்னித்து மறந்து நேசத்தை காட்டுங்கள். சீர்திருத்தம் அவர்கள் நல்வாழ்வுக்கு தான் என்பதை சிட்சையின் மூலம் காட்டுங்கள். இப்படி செய்வதினால் உங்கள் பிள்ளைகள் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பார்கள்.**

- தொடரும்

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

## ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடையாளங்கள்

1. முதிர்ச்சியுள்ள கிறிஸ்துவன் தன் எஜமானனைப் (இயேசுவை) பிரியப்படுத்தி வாழுவான். அவரைப் போல மாற முயற்சிப்பான் (லூக்கா 6:40). இயேசு பிதாவுக்கு பிரியமானவைகளை மட்டும் செய்தார் (யோவான் 8:29; கலா.1:10).
2. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் எளிதாகக் கள்ள உபதேசங்களால் வஞ்சிக்கப்பட மாட்டான் (எபே.4:11-15). அவன் சத்தியத்தை நன்கு அறிந்து, தவறான உபதேசங்களை வெறுத்து விலகி வாழுவான் (சங்.119:104; ரோமர் 12:9).
3. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் நன்மை, தீமை இன்னதென்று பகுத்தறிகிறவனாக இருப்பான் (எபி.5:11-6:1). தேவ வசனத்தை ஜாக்கிரதையாகப் படிக்கும்போது அது நம்மை தேறினவர்களாக மாற்றும். சரியான தீர்மானங்கள் எடுக்க உதவி செய்யும் (2 தீமோ.3:16).
4. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் உபத்திரத்தைக் கண்டு அஞ்சமாட்டான் (யாக்கோபு 1: 4-5). உபத்திரவம் வரும் என்பதை அறிந்திருப்பான் (அப்.14:22). அதில் பொறுமையாயிருப்பான் (ரோமர் 12:12). அதில் சோர்ந்து போக மாட்டான் (1 பேதுரு 1:6,7; 12-16).
5. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவனின் இருதயம் கர்த்தருக்கு நேராகச் செம்மையாயிருக்கும் (1 நாளா. 28:9; 1 இராஜா 8:61). தன் இருதயத்தை எல்லா காவலோடும் காத்துக் கொள்ளுவான் (நீதி.4:23). ஆவிக்குரிய காரியங்களிலும் மேலானவைகளிலும் தன் இருதயத்தை வைத்திருப்பான் (கொலோ.3:1,2).
6. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும் வளரப் பிரயாசம் எடுப்பான் (2 கொரி.7:1). விசுவாசத்தில் வளர்ந்து கொண்டே இருப்பான். தேவனுக்குப் பிரியமில்லாத தகாத உறவுகள், பேச்சுக்கள், நடத்தைகளை விட்டு விலகியிருப்பான் (சங்கீதம் 1:1-3).
7. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் ஒற்றுமையோடு வாழ பிரயாசப்படுவான் (1 கொரி. 1:10). பொறாமை, வாக்குவாதம், பிரிவினை ஆகியவைகள் முதிர்ச்சியற்ற கிறிஸ்தவனின் அடையாளங்கள் (1 கொரி.3:1-3). ஆனால் அன்பு, ஐக்கியம், ஒற்றுமை முதிர்ச்சியின் அடையாளங்கள் (பிலி. 2.1-4).
8. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் தன் நாவில் அடக்கம் உள்ளவனாயிருப்பான் (யாக்கோபு 3:2). வாயின் வார்த்தையில் கவனமாயிருப்பான் (யாக்கோபு 1:26). புறங்கூறுதல், மற்றவர்களைப் புண்படுத்துதல், குற்றஞ்சாட்டுதல் ஆகியவற்றில் ஈடுபடமாட்டான்.
9. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவனிடம் உண்மையான. மாயமற்ற அன்பு காணப்படும் (கொலோ 3:14; ரோமர் 12:9,10; 1 யோவான் 2:5).
10. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் எப்பொழுதும் தேவனையே சார்ந்து வாழப் பழகியிருப்பான் (யோவான் 15:5). ஜெபம் அவனுடைய வாழ்வின் மூச்சாக காணப்படும்.
11. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவனிடம் கலாத்தியர் 5:22,23 வசனங்களில் கூறப்பட்ட ஆவியின் கனிகள் அனைத்தும் காணப்படும்.
12. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் ஆத்துமபாரம் உடையவனாயிருப்பான். ஆத்தும ஆதாயம் அவனுடைய இதய துடிப்பாக இருக்கும் (1 கொரி.9:16; 2 கொரி.5:14).



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20

Contributing Editor, Paripoorana Jeevan


ஹாய் குட்டீஸ்! புதிய கல்வியாண்டிற்கு உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன். புதிய வகுப்பு, புதிய ஆசிரியர்கள், புதிய நண்பர்கள், புதிய அனுபவங்கள் என்று இந்த ஆண்டு உங்களுக்கு கற்றலும், மகிழ்ச்சியும் நிறைந்த ஆண்டாக அமைய வாழ்த்துகிறேன். இன்று நாம் ஒரு சுவாரஸ்யமான கதையின் மூலம் ஒரு முக்கியமான வாழ்க்கைப் பாடத்தை கற்றுக்கொள்ளப் போகிறோம். ஒரு சிறிய தவளையின் கதையை கேட்போமா?

ஒரு கிராமத்தில் மிகவும் பழமையான ஒரு கிணறு இருந்தது. அந்தக் கிணற்றில் ஒரு சிறிய தவளை வாழ்ந்து வந்தது. பிறந்த நாள் முதல் அதே கிணற்றில்தான் அது இருந்தது. கிணற்றின் சுவர்கள், அதில் இருந்த தண்ணீர், மேலே தெரியும் சிறிய வானம் இதுவே அதன் உலகம். அந்தத் தவளை அடிக்கடி பெருமையாக நினைத்துக் கொள்ளும். என் கிணறுதான் உலகிலேயே மிகப் பெரிய இடம்! இதைவிட அழகான இடம் எங்கும் இருக்க முடியாது! என்று தனக்குத்தானே சொல்லிக் கொள்ளும்.

ஒருநாள் மாலை நேரத்தில், வெளியிலிருந்து வேறு ஒரு தவளை அந்தக் கிணற்றின் அருகே வந்தது. அது பல இடங்களைச் சுற்றிப் பார்த்த அனுபவம் கொண்ட தவளை.

கிணற்றில் வாழ்ந்த தவளை, வெளியிலிருந்து வந்த புதிய தவளையைப் பார்த்ததும் மிகவும் ஆச்சரியமடைந்தது. நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? என்று ஆர்வத்துடன் கேட்டது.

நான் கடலிலிருந்து வருகிறேன், என்று அமைதியாகப் பதிலளித்தது அந்தப் புதிய தவளை. கடலிலிருந்தா? கடல் என்றால் என்ன? என்று கிணற்றுத் தவளை வியப்புடன் கேட்டது. ஏனெனில் அது தனது வாழ்நாளில் கிணற்றைத் தவிர வேறு எந்த இடத்தையும் பார்த்ததில்லை.

கடல் என்பது மிகப் பெரிய நீர்ப்பரப்பு. அதன் பரப்பு அவ்வளவு விசாலமானது; ஒரே பார்வையில் முழுவதையும் பார்க்க முடியாது, என்று புதிய தவளை விளக்கியது.

இதைக் கேட்ட கிணற்றுத் தவளை சிரித்தது. அப்படியா? அது என் கிணற்றைவிட இரண்டு மடங்கு பெரியதா? என்று கேட்டது. இல்லை, அதைவிட மிகவும் பெரியது, என்றது புதிய தவளை. அப்படியானால் பத்து மடங்கு பெரியதா? என்று மீண்டும் கேட்டது கிணற்றுத் தவளை. அதையும் விட எண்ணற்ற மடங்கு பெரியது, என்று பதிலளித்தது புதிய தவளை. இப்போது கிணற்றுத் தவளைக்கு எரிச்சல் ஏற்பட்டது. சரி, நூறு மடங்கு பெரியதா? என்று சற்று கோபத்துடன் கேட்டது.

அதற்கு புதிய தவளை, நீ எவ்வளவு பெரிய எண்ணைச் சொன்னாலும், கடலின் பரப்பை அதனால் அளக்க முடியாது. அது உன் கற்பனைக்கும் அப்பாற்பட்டது, என்று கூறியது. ஆனால் கிணற்றுத் தவளையால் அதை நம்ப முடியவில்லை. தன் சிறிய உலகத்தைத் தவிர வேறு பெரிய உலகம் இருக்கலாம் என்பதை ஏற்றுக்கொள்ள அதன் மனம் தயாராக இல்லை.

இல்லை! அது சாத்தியமே இல்லை. என் கிணற்றைவிட பெரிய இடம் எதுவும் இருக்க முடியாது, என்று கூறிவிட்டு, உண்மையை அறிந்துகொள்ள முயற்சிக்காமலேயே அங்கிருந்து சென்றுவிட்டது. ஏன் அந்தத் தவளை கடலை நம்பவில்லை தெரியுமா?

அது இதுவரை கிணற்றைத் தவிர வேறு எதையும் பார்த்ததில்லை. அதனால் தன் சிறிய உலகமே முழு உலகம் என்று நினைத்தது.

தம்பி, தங்காய், இந்தக் கதையில் வரும் கிணற்றுத் தவளை போல நாமும் சில நேரங்களில் நடந்து கொள்கிறோம். நமக்குத் தெரிந்தது மட்டுமே சரி என்று நினைக்கிறோம். அதற்காக பிறரிடம் முரண்டு பிடிக்கிறோம். நமது கருத்து மட்டுமே உண்மை என்று நம்புகிறோம். மற்றவர்கள் சொல்லும் நல்ல விஷயங்களைக் கூட கேட்கத் தயங்குகிறோம். ஆனால் உலகம் மிகவும் பெரியது. நாம் அறிந்ததைவிட அறியாதவை அதிகம்.

ஒரு மாணவன் தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைத்தால் அவன் புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ள முடியாது. ஆனால் நான் இன்னும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைத்தால், அவன் நாளுக்கு நாள் அறிவில் வளருவான். நாம் சந்திக்கும் ஒவ்வொருவரிடமிருந்தும் ஏதாவது ஒன்றைக் கற்றுக்கொள்ளலாம்.

ஒரு குழந்தையிடமிருந்து சிரிப்பையும் நேர்மையையும் கற்றுக்கொள்ளலாம். ஒரு ஆசிரியரிடமிருந்து அறிவைக் கற்றுக்கொள்ளலாம். ஒரு முதியவரிடமிருந்து அனுபவத்தை கற்றுக்கொள்ளலாம். ஒரு தோல்வியடைந்தவரிடமிருந்து எந்தத் தவறுகளைச் செய்யக்கூடாது என்பதை அறிந்து கொள்ளலாம். ஒரு வெற்றியாளரிடமிருந்து விடாமுயற்சியின் மதிப்பைக் கற்றுக்கொள்ளலாம். இவ்வாறு கற்றுக்கொள்ளும் மனப்பான்மை உள்ளவர்கள் எப்போதும் முன்னேறுவார்கள்.

ஒருமுறை ஒரு சிறுவன் தனது ஆசிரியரிடம் கேட்டான்: சார், அறிவாளியாக என்ன செய்ய வேண்டும்? அதற்கு ஆசிரியர் சிரித்துக்கொண்டே, எப்போதும் கேள்விகள் கேள். புதிய விஷயங்களைக் கற்றுக்கொள். மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வெட்கப்படாதே. அப்போதுதான் நீ அறிவில் வளர முடியும் என்றார்.

எனவே, நாம் எப்போதும் புதிய, நல்ல, ஆரோக்கியமான விஷயங்களைக் கற்றுக்கொள்ள தயாராக இருக்க வேண்டும். நல்ல புத்தகங்களைப் படிக்க வேண்டும். ஆசிரியர்களின் ஆலோசனைகளை கேட்க வேண்டும். பெற்றோரின் அறிவுரைகளை மதிக்க வேண்டும். அப்போது தான் நமது சிந்தனைகள் விரிவடையும். நமது அறிவு பெருகும், நமது வாழ்க்கை சிறப்பாக மாறும்.

கிணற்றுத் தவளைபோல சிறிய உலகத்திற்குள் அடைந்து கொள்ளாமல், கடலைப் பார்க்கும் மனதுடன் வாழ்வோம். புதிய கல்வியாண்டில், புதிய கிருபை பெற்று, புதிய அறிவை வரவேற்போம். புதிய அனுபவங்களை ஏற்றுக்கொள்வோம். தாழ்மையுடன் கற்றுக்கொள்வோம். அப்போது தேவன் நமக்கு கொடுத்துள்ள அற்புதமான உலகத்தையும், அவருடைய மகத்தான செயல்களையும் இன்னும் தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

ஞானமுள்ளவன் கேட்டு அறிவில் பெருகுவான்; புத்திமான் இவைகளைக் கேட்டு அறிவில் தேறுவான் (நீதி.1:5).

எனவே, எனதருமை பிள்ளைகளே, இந்த புதிய கல்வி ஆண்டில் எப்போதும் கற்றுக்கொள்ளும் மனதுடன் இருங்கள். உங்கள் மனப்பான்மையை விரிவுபடுத்துங்கள். அறிவிலும், ஞானத்திலும், தேவனுடைய கிருபையிலும் வளர மனம் நிறைந்து ஜெபத்துடன் வாழ்த்துகிறோம். இந்த மாத சிறுவர் பகுதி உங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்களது மேலான கருத்துக்களை, சாட்சிகளை 97503 81784 என்ற வாட்சாப் எண்ணிற்கு தெரியப்படுத்தலாம். அடுத்த இதழில் மற்றொரு சுவாரசியமான ஸ்டோரியோடு உங்களை மீட் பண்ணுறேன். டாட்டா.



# ஆம், உன்னால் முடியும்
# Yes, You Can

**Rev.K. ராஜா**
இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்

கிறிஸ்துவில் அன்பான மாணவ, மாணவிகளுக்கு SFC ஊழியத்தின் சார்பாக அன்பின் வாழ்த்துக்கள்.

ஒரு புதிய கல்வியாண்டிற்குள் (2026-2027) அடியெடுத்து வைக்கும் மாணவ, மாணவிகள் அனைவரும் கடந்த கல்வியாண்டை விட, இந்த புதிய கல்வியாண்டில் சிறப்பான வெற்றி பெற வேண்டும் என உங்களை உற்சாகப்படுத்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். புதிய வகுப்பறை, புதிய நோட்டு புத்தகங்கள், புதிய பேனா, புதிய ஆடைகள் என Maximum எல்லாமே புதிதாக இருக்கும்போது, உங்களுடைய மனதும் கூட ஏன் புதிதாக இருக்கக்கூடாது. கடந்த கால தோல்வி, ஏமாற்றம் குறைவுகள் என அனைத்து காரியங்களும் உங்கள் மனதை விட்டு நீங்கட்டும். உங்கள் மனதில் புதிய நம்பிக்கை, புதிய தைரியம் பிறக்கட்டும்.

நீங்கள் நினைத்தால் இந்த கல்வியாண்டை வெற்றியுள்ளதாக மாற்ற முடியும் என்பதில் சந்தேகமேயில்லை. அதற்கு நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய காரியங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

1. **A**MBITION **(இலட்சியம்)**; 2. **G**OAL **(இலக்கு)**; 3. **S**TART **(துவக்கம்)**; 4. **F**AITH **(விசுவாசம்)**; 5. **C**ONSISTENCY **(தொடர் முயற்சி)**

## 1. AMBITION (இலட்சியம்):

உங்கள் வாழ்க்கையில் என்னவாக விரும்புகிறீர்கள் என்ற இலட்சியத்தை மறந்து போகாதீர்கள் மனதில் கொள்ளுங்கள். இலட்சியம் இல்லாத எந்த ஒரு வேலையும் உண்மையான வெற்றியைத் தராது. தெளிவான இலட்சியம் உங்களை சரியான பாதையில் நடத்தும், உங்கள் திறமையை வெளியே கொண்டு வரும், நேர வீணாகுதலைத் தடுக்கும், சரியான தீர்மானம் எடுக்க உதவும்.

- லட்சியத்திற்கும், அலட்சியத்திற்கும் ஒரு எழுத்துதான் வித்தியாசம் லட்சியம். உங்களை முன்னே கூட்டிச்செல்லும் அலட்சியம் உங்களை பின்னே தள்ளிச் செல்லும்
- நிலவைக் குறிவை, தவறினாலும் நட்சத்திரங்களுக்கு நடுவில் இருப்பாய் – **லெஸ் பிரவுன்**
- ஒரு முறை வந்தால் கனவு, இரு முறை வந்தால் ஆசை, பல முறை வந்தால் அது இலட்சியம் – **Dr.APJ அப்துல் கலாம்.**

## 2. GOAL (இலக்கு):

இலட்சியத்தை மனதிற் கொண்டபின், அமைதியாக இருந்து விட்டால், இலட்சியத்தை அடைய முடியாது. இலட்சியத்தை அடைவதற்கு இலக்குகள் மிகவும் முக்கியம். இலக்குகள் என்பது மாடிக்குச் செல்ல உதவும் படிக்கட்டுகளைப் போன்றது. உதாரணமாக, நீங்கள் டாக்டராக விரும்பினால், 10ம் வகுப்பில் நல்ல மதிப்பெண்

பெற்று 11ம் வகுப்பில் Biology Group Select பண்ண வேண்டும். 11-ம், 12-ம், வகுப்புகளில் சிறந்த மதிப்பெண் பெற வேண்டும். அடுத்து தற்போது நடைமுறையில் இருக்கும் NEET Exam-ல் நல்ல மதிப்பெண் பெற வேண்டும். இதையெல்லாம் சரியாக முடித்தால் தான் மருத்துவக் கல்லூரியில் சேர முடியும். இதைப்போல நீங்கள் எந்தத் துறையில் உங்கள் இலட்சியத்தை அடைய விரும்புகிறீர்களோ அதற்கேற்ப இலக்குகளை நிர்ணயித்து செயல்பட வேண்டும்.

- இலக்கு சரியாக இருந்தால் வழிதானாக பிறக்கும்.
- ஜெயிக்க வேண்டும் என்று முடிவெடுத்து விட்டால், கண்களுக்குத் தெரிய வேண்டியது காரணங்கள் அல்ல இலக்கு மட்டுமே.

### 3. START (துவக்கம்):

இலக்கை தீர்மானித்தவுடன் செயல்பட ஆரம்பிப்பதே வெற்றியைக் கொண்டு வரும். காலதாமதம் செய்யாதீர்கள். நாளை அல்லது பிறகு என்று தள்ளிப்போடும் ஒவ்வொரு நொடியும் உங்கள் வெற்றியை நோக்கிய பயணத்தைத் தாமதப்படுத்தும்.

- வெற்றி பெற நீங்கள் சிறந்தவராக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், இன்றே இப்பொழுதே உங்கள் வேலையைத் துவங்க வேண்டும்.
- கனவு காணுங்கள்! ஆனால், வெறும் கனவோடு நின்று விடாமல் உங்கள் கனவை நனவாக்க உடனே செயல்படத் துவங்குங்கள் – **Dr.APJ அப்துல் கலாம்.**
- எதுவும் செய்யாமல் நாளை வரை காத்திருப்பதை விட, இன்றே சிறிய அளவில் தொடங்குவது சிறந்தது.
- துவங்குவதே வெற்றிக்கான முதல் ரகசியம் – **வால்ட் டிஸ்னி.**
- நம்பிக்கையோடு உங்கள் அடியை எடுத்து வையுங்கள். முழுப்படிக்கட்டையும் பார்க்க வேண்டிய அவசியமில்லை, முதல் படியை ஏறுங்கள் – **மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர்.**

### 4. FAITH (விசுவாசம்):

வெற்றிக்கு மிகப்பெரிய பலம் விசுவாசம் என்று சொன்னால் மிகையாகாது. உங்கள் விசுவாசம் ஜெயிக்கும் என்று 1யோ.5:4-ம் வசனம் சொல்கிறது. விசுவாசத்தினாலே ஜெயித்தார்கள் என்று எபி.11:33-ம் வசனம் சொல்கிறது. என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலமுண்டு என்று சொன்ன பவுலைப்போல உங்களாலும் முடியும் என்ற விசுவாசத்தோடு இலக்கை நோக்கித் தொடருங்கள்.

- **(கிதியோனே)** உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ... நீ மீதியானரை முறியடிப்பாய் (ஜெயிப்பாய்)- (நியா.6:14-16).
- மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார் (மத்தேயு 21:22).
- இயேசு அவனை நோக்கி. நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார் (மாற்கு 9:23).
- இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள் (மாற்கு 11:22).
- அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது (ரோமர் 10:11).

- விசுவாசமில்லாமல் எதையும் சாதிக்க முடியாது. அதுவே அனைத்து வெற்றிகளுக்கும் அடிப்படை.

**5. CONSISTENCY (தொடர் முயற்சி) :**

எந்த ஒரு இலக்கையும் அடைய வேண்டுமானாலும் தொடர் முயற்சி (Consistency) மிகவும் முக்கியம். ஏனெனில் ஒரே நாளில் அதிக முயற்சி செய்வதை விட, தினமும் சிறிது முன்னேற்றத்துடன் தொடர்ந்து செல்லும் பயணம்தான் நிலையான வெற்றியை உருவாக்குகிறது. சில நாட்களில் motivation குறையலாம், சூழ்நிலைகள் எதிராக இருக்கலாம், முடிவுகள் தாமதமாகலாம். ஆனால் Consistency இருந்தால் மனநிலை மாறினாலும் பயணம் நின்றுவிடாது. தொடர்ந்து முயற்சி செய்வது நம்முள் ஒழுக்கத்தையும், பொறுமையையும், தன்னம்பிக்கையையும் வளர்க்கிறது. அதைவிட முக்கியமாக, "இப்போது தெரியாத பாதையையும் தேவன் சரியான நேரத்தில் அர்த்தமுள்ளதாக்குவார்" என்ற விசுவாசத்தை உருவாக்குகிறது. பெரிய சாதனைகள் திடீரென வருவதில்லை, தினமும் அமைதியாக செய்யப்படும் சிறிய தொடர் முயற்சி (Consistent) முயற்சிகளின் சேர்க்கையில்தான் அவை உருவாகின்றன.

- வெற்றி என்பது மற்றவர்கள் கைவிட்டுவிட்ட பின்பும் அயராமல் தொடர்வதாலேயே கிட்டுவதாகும்.
- நேரமும், வாய்ப்பும் எல்லோருக்கும் எப்பொழுதும் இருந்து கொண்டே தான் இருக்கின்றன. ஆனால் முயற்சி செய்பவர்கள் மட்டுமே தாங்கள் நினைத்ததை அடைகிறார்கள் – **ஜேம்ஸ் ஆலன் .**
- தொடர் முயற்சியே வெற்றியின் திறவுகோல். **(Consistency is the key to success).**
- பெரிய சாதனைகள் ஒரே நாளில் உருவாவதில்லை, அவை தொடர்ச்சியான சிறு முயற்சிகளின் பலனே.
- நீ எவ்வளவு வேகமாகச் செல்கிறாய் என்பது முக்கியமல்ல, எவ்வளவு தொடர்ச்சியாக முன்னேறுகிறாய் என்பதே முக்கியம்.
- விடாமுயற்சி என்பது ஒரு முறை செய்வது அல்ல. அது தோல்வியடையும் போதெல்லாம் தொடர்ந்து செய்வது.
- தண்ணீரின் மென்மையான துளிகள் கூட, தொடர்ச்சியான முயற்சியால் பாறையைத் துளைக்கின்றன.

அன்பான மாணவச் செல்வங்களே! உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன், என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன் சங்.18:29 வசனத்தின்படி, இந்தப் புதிய கல்வியாண்டில் தேவன் உங்களை பெலப்படுத்தி, ஆசீர்வதித்து, சிறப்பான வெற்றியைத் தந்து மேன்மைப்படுத்துவாராக. உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

---



**ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!**

தமிழ் பிரதேச ஏ.ஜி. மாநாடு – ஜீலை 14–15

தென் இந்திய ஏ.ஜி. மாநாடு – செப்.15–17





# இன்றைய சிறுவர்கள் நாளைய திருச்சபையின் எதிர்காலம்

Rev. S.P. ராஜசெல்வம்
இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்

'பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்' (நீதி.22:6).

அன்பான ஆசிரியர்களே, பெற்றோர்களே இந்த இதழின் வழியாக சந்திப்பதில் அதிக மகிழ்ச்சி. மேற்கண்ட வசனத்தின் அடிப்படையில் சிறுபிள்ளைகளை சரியான வழியில் நாம் நடத்தும்பொழுது அவர்கள் எந்த சூழ்நிலையிலும் விட்டு விலகாது இருப்பார்கள்.

ஒரு நாட்டின் எதிர்காலம் அதன் இளைஞர்களிடம் இருக்கிறது என்று உலகம் கூறுகிறது. ஆனால் ஒரு திருச்சபையின் எதிர்காலம் அதன் சிறுவர்களிடம் இருக்கிறது என்று வேதாகமம் நமக்குக் கற்றுக்கொடுக்கிறது.

இன்று நமது திருச்சபைகளில் அதிகமான சிறுவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களில் எத்தனை பேர் கிறிஸ்துவை தனிப்பட்ட இரட்சகராக அறிந்திருக்கிறார்கள்? எத்தனை பேர் தினசரி ஜெபிக்கிறார்கள்? எத்தனை பேர் வேதாகமம் வாசிக்கிறார்கள்?

இவை நம்மை சிந்திக்க வைக்கும் கேள்விகள்.

## I.இன்றைய சிறுவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

### 1) தொழில்நுட்பத்தின் தாக்கம்

இன்றைய தலைமுறை முந்தைய தலைமுறையைப் போல இல்லை. முன்பு பிள்ளைகள் வேதாகமக் கதைகளைக் கேட்டார்கள். இன்று அவர்கள் இணையத்தில் நேரத்தை மணிக்கணக்காக செலவிடுகிறார்கள்.

மொபைல் போன், யூடியூப், சமூக வலைத்தளங்கள், ஆன்லைன் விளையாட்டுகள் இவை பிள்ளைகளின் மனதை ஆக்கிரமித்து வருகின்றன.

பல குழந்தைகள் காலை எழுந்தவுடன் தேவனை பார்ப்பதற்கு பதிலாக கைபேசியைப் பார்க்கிறார்கள்.

### 2) ஆவிக்குரிய அலட்சியம்

பல குடும்பங்களில் குடும்ப ஜெபம் இல்லை, வேத வாசிப்பு இல்லை, ஒழுக்கம் இல்லை. இதனால் பிள்ளைகள் ஆவிக்குரிய வளர்ச்சியை இழந்து வருகின்றனர்.

### 3) உலகத்தின் அழுத்தம்

பள்ளி, நண்பர்கள், இணையம் ஆகியவற்றின் மூலம் உலகத்தின் பாதிப்புகள் தாக்கம் குழந்தைகளுக்குள் நுழைகின்றன.

இதன் விளைவாக, பொய், கீழ்ப்படியாமை, கோபம், சுயநலம், தேவனை மறத்தல் போன்றவை அதிகரிக்கின்றன.

## II.ஏன் சிறுவர் ஊழியம் மிகவும் முக்கியம்?

சாத்தான் ஒரு மனிதனை முதுமையில் தாக்குவதற்கு முன், சிறுவயதிலேயே பிடிக்க முயற்சிக்கிறான். அதனால் தான் இயேசு சிறுவர்களுக்கு முக்கியத்துவம்

கொடுத்தார். வேதாகமத்தில் பலரை நாம் பார்க்க முடியும். சாமுவேல் சிறுவயதிலேயே தேவனுடைய சத்தத்தைக் கேட்டான். 'கர்த்தாவே சொல்லும்; அடியேன் கேட்கிறேன். பின்னர் இஸ்ரவேலின் மகத்தான தீர்க்கதரிசியானான். தாவீது சிறுவயதில் ஆடுகளை மேய்த்தான். அந்த வயதிலேயே தேவன்பேரில் விசுவாசம் வைத்தான். அதனால் கோலியாத்தை வென்றான். தானியேல் இளைஞனாக இருந்தபோதே தேவனுக்காக உறுதியாக நின்றான். அதனால் ராஜாக்களின் மத்தியிலும் உயர்த்தப்பட்டான். தீமோத்தேயு சிறுவயதிலிருந்தே வேதாகமத்தை அறிந்திருந்தான். அதனால் பவுலின் சிறந்த ஊழியக்காரனானான்.

## III. சிறுவர் ஊழிய ஆசிரியர்களின் பொறுப்பு

ஆசிரியர்களே, நீங்கள் ஒரு பாடத்தை மட்டும் கற்பிப்பதில்லை. நீங்கள் எதிர்கால போதகரை, சுவிசேஷகரை, மிஷனரியை, திருச்சபை தலைவரை தேசத்தில் பொறுப்புள்ள அதிகாரிகளை உருவாக்குகிறீர்கள் என்பதை மனதில் கொள்ளுங்கள். எனவே ஆசிரியராகிய உங்கள் வாழ்க்கையை ஒரு முன்மாதிரியாக இருக்கட்டும். பிள்ளைகள் உங்கள் வார்த்தைகளை விட உங்கள் வாழ்க்கையை தான் அதிகம் பார்க்கிறார்கள்.

நீங்கள் ஜெபிக்க வேண்டும். வேதாகமம் வாசிக்க வேண்டும். பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டும். அப்போது தான் பிள்ளைகள் உங்களைப் பின்பற்றுவார்கள். ஒவ்வொரு பிள்ளையையும் நேசியுங்கள். ஒரு பிள்ளை சுத்தமற்றதாக இருக்கலாம். ஒரு பிள்ளை குறும்புக்காரனாக இருக்கலாம். ஒரு பிள்ளை ஏழையாக இருக்கலாம். ஆனால் அந்த பிள்ளைக்காக இயேசு இரத்தம் சிந்தினார். அவர்களை அன்போடு அணுகுங்கள்.

## IV. பெற்றோரின் பொறுப்பு

ஞாயிறு பள்ளி வாரத்திற்கு ஒரு மணி நேரம் மட்டுமே. ஆனால் பெற்றோர்கள் தினமும் பிள்ளைகளுடன் இருக்கிறார்கள். அதனால் பெற்றோர்களே முதன்மை ஆசிரியர்கள் நீங்கள் வீட்டில் செய்ய வேண்டியவை.

➤குடும்ப ஜெபம்; ➤வேதாகம வாசிப்பு; ➤கிறிஸ்தவ பாடல்கள்; ➤தேவனைப் பற்றிய உரையாடல்கள்; ➤நல்ல முன்மாதிரி வாழ்க்கை.

பிள்ளைகள் நாம் சொல்வதை விட நாம் செய்வதைத்தான் அதிகமாகக் கற்றுக்கொள்கிறார்கள்.

## V. பிள்ளைகளின் பொறுப்பு

பிள்ளைகளே, நீங்கள் தேவனுடைய திட்டத்தை செயல்படுத்த பிறந்தவர்கள். ஒருவேளை ஒரு போதகராக, ஒரு மிஷனரியாக, ஒரு ஆசிரியராக, ஒரு மருத்துவராக, ஒரு தலைவராக, தேவன் உங்களைப் பயன்படுத்த விரும்பலாம். அதற்காக இப்போதே தேவனோடு நடக்கத் தொடங்குங்கள்.

### தினசரி மூன்று பழக்கங்கள்

1.ஜெபியுங்கள் (காலை இரவு); 2.வேதாகமம் வாசியுங்கள்; (தினமும் குறைந்தது 10 நிமிடங்கள்); 3.சுவிசேஷம் அறிவியுங்கள் (குறைந்து ஒரு நண்பர்களுக்காகவது)

இன்று நாம் சிறுவர்களை புறக்கணித்தால், நாளை திருச்சபைகள் காலியாகத்தான் இருக்கும். ஊழியக்காரர்கள் குறைவாக இருப்பார்கள். ஆவிக்குரிய தலைமுறை பலவீனப்படும். ஆனால் இன்று நாம் அவர்களிடம் கரிசனையுடன்

நடந்து கொண்டால், நாளை வல்லமையான விசுவாசிகள் எழும்புவார்கள். திருச்சபைகள் வளர்ச்சி அடையும். தேசம் ஆசீர்வதிக்கப்படும். இன்றைய சிறுவர்கள் நாளைய திருச்சபையின் எதிர்காலம்

ஒரு சிறுவனை கிறிஸ்துவுக்குள் நடத்துவது ஒரு ஆன்மாவை மட்டும் இரட்சிப்பதல்ல; ஒரு தலைமுறையை மாற்றுவதாகும்.

எனவே:

ஆசிரியர்களே – கற்பிப்போம்.

பெற்றோர்களே – வழிநடத்துவோம்.

பிள்ளைகளே – கிறிஸ்துவில் வளர்வோம்.

அப்போது நமது திருச்சபைகளும், குடும்பங்களும், தேசமும் தேவனுக்காக எழும்பும்.

'சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடம் கொடுங்கள். அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது' (மத்தேயு 19:14). இந்த வசனம் நிச்சயம் நிறைவேறும்.

## போட்டி எண் : 17 (சரியான விடைகள்)

| | | |
|---|---|---|
| 1. | உபதேசம் | யோபு 6:24 |
| 2. | ராஜாவாகிய அகாஸ்வேரு | எஸ்தர் 10:1 |
| 3. | கொடுத்தார், எடுத்தார் | யோபு 1:21 |
| 4. | சிரேஷ் | எஸ்தர் 6:13 |
| 5. | சேறில்லாமல் | யோபு 8:11 |
| 6. | பிக்தானும், தேரேசும் | எஸ்தர் 2:21 |
| 7. | வருத்தம் | யோபு 5:7 |
| 8. | அற்போனா | எஸ்தர் 7:9 |
| 9. | தீவினையை | யோபு 4:8 |
| 10. | மொர்தெகாய் | எஸ்தர் 2:5 |
| 11. | சமுத்திரமோ? ஒரு திமிங்கலமோ? | யோபு 7:12 |
| 12. | எகொனியா | எஸ்தர் 2:6 |
| 13. | தூஷித்து | யோபு 2:9 |
| 14. | எஸ்தர் | எஸ்தர் 2:5 |
| 15. | வெள்ளம்போல் | யோபு 3:24 |
| 16. | வஸ்தி | எஸ்தர் 1:10 |
| 17. | துன்மார்க்கனாயிருந்தால் | யோபு 10:15 |
| 18. | ஆமான் | எஸ்தர் 3:6 |
| 19. | துன்மார்க்கர் | யோபு 9:24 |
| 20. | ஆத்தாகு | எஸ்தர் 4:9 |

## போட்டி எண் : 17 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை** : பிரபா; சித்ரா பிளஸ்சி; சாந்தி; கோகிலா; கனகவல்லி; எஸ்தர்; விஜி; செல்வி; பிரின்ஸ் ஜெனிபர்; ஜீவா; மொர்ஸி ராஜம்; பெனிட்டா; குளோரி;புஷ்பவல்லி; இவாஞ்சலின்; மாது; ரேஷ்மா; லீதியாள்; மஞ்சு; டோரா; M.சுமதி; மரகதம்; J.சுமதி; S.முத்துலெட்சுமி; E.கலா; T.கலா; முத்துகோபால்; V.மகேஷ்வரி; ராணி பிளஸிங்; ஜெயசிலின்; பெனிட்டா ராணி; மாரிச்செல்வி @ மரியாள்; பிரியா; K.மகேஷ்வரி; பிரேமலதா; மயில்; கிறிஸ்டி; ராதாமணி; | **நத்தக்காடையூர்**: தீபிகா; சங்கீதா; மோகனாம்பாள்; மோனிகா; செல்வி; பென்சி; ஏசையன்; சரளா தேவி; வில்சன்; | **தேனி**: செண்பகபுஷ்பா; கார்த்திகையாயினி; மொர்சி; ராகேல் ஜோசப்; மஹிதா; கிருபா; பூமணி ஜான்சி; திரவியச்செல்வி; |**எடப்பாடி**: கிருபாகரன்; அஞ்சலி அரசு; சுஜிதா; மல்லிகா ஜீவா; ஜோசப் மேரி; சத்ய மூர்த்தி; கவின்; எப்சிபா ஜோயல்; | **ஸ்ரீவில்லிபுத்தூர்**: அபிஷா; R.வசந்தா; J.வசந்தா; கிருபா; ஜான் பீட்டர்; நெல்சன் செல்வராஜ்; அழகு நாச்சியார்; வெங்கடவள்ளி; | **சேத்துப்பட்டு**: செல்வமொழி; லெஷ்மிகாந்த்; ரெக்ஸி ஈஸ்வரன்; அமுல் மேரி; ஜெபா விஜய்; சாந்தி பெனடிக்; மரகதம்; | **கடையநல்லூர்**: பெல்சியா; ஹேமா; விக்டோரியா; வினோலியா; ஸ்டெல்லா; செல்வி இந்திராணி; | **இராதாபுரம்**: பிரகாசியம்மாள்; மல்லிகா; அருள்செல்வி; நித்யா; செல்வபிரியா; ஜெயா;

## போட்டி எண் : 17 (சரியான விடை எழுதியவர்கள்...)

மரகதம்; |**மடத்துக்குளம்**: சேர்மக்கனி; ஜெனிட்டா; ஜூலியட் மேரி; ரூத்; ஸ்டெல்லா மேரி; பரிமளா; | **கரூர்**: நிவாஸ்; நிவேதா; ஜெயந்தி தாமஸ்; குட்டி மார்டின்; லெனி; |**ஆண்டிபட்டி**: புளோரியா; பூங்கொடி; தேவபாக்கியம்; யுகஸ்ரீ; |**தூத்துக்குடி**: ஹேமா குமார்; சுகந்தி ஜீசஸ்; கிருபா ஜெஃப்ரி; ஜெமிலா மோனிஷா; | **கொக்கராயன்பேட்டை** : மாலதி; ஷாலினி; அக்ஷயா; அபிஜித்; |**தர்மபுரி**: ஜோயா; மாதம்மாள்; ரூத்; |**கோயம்புத்தூர்**: நித்யா பெர்க்மான்ஸ்; ரத்தினம்; கிறிஸ்டினா அபிகாயில்; |**நாகலாபுரம்**: ஷாலோம் இன்பெண்ட் சுஜந்த்; குளோரி அம்மாள்; வில்லி ஜெனட்தங்கம்; |**கவரைப்பேட்டை**: நந்தினி; சலோமி; புவனா; | **ஏழாயிரம் பண்ணை**: ஜாய்; ஜோதி பிரியா; செண்பகவள்ளி; **உடுமலைப்பேட்டை**: சூசன்னாள்; உஷா மாலதி; ஆக்னஸ்; |**கோவில்பட்டி**: செல்வின் பால்; ரேச்சல்; மரியாள் ஜெயசீலி; | **ஆலங்குளம்(வி)**: உமா ரோஸ்லின்; ஸ்டெல்லா; மரியாள்; |**மதுரை**: கனகவள்ளி; கீர்த்தனா ரூபன்; அருண்செல்வம்; |**பெரியகுளம்**: ஜேம்ஸ் மேரி; ராணி; பவுன்தாய்; |**பரமத்திவேலூர்**: ஈஸ்வரி; திருச்செல்வி; பாமா; |**அச்சரப்பாக்கம்**: நான்சி; செல்வகுமாரி; இளங்கோ; |**உவரி**: ஜெரால்டின்; மேஷாக்; மைக்கேல்; |**கடாட்சபுரம்**: ரேவதி கில்பர்ட்; சுசிலா; **சிட்லபாக்கம்**: ரெபேக்காள்; மோனிகா; |**சென்னை** : எமீமாள்; மெர்லின் ஹெலன் பிரிதியா; |**கோத்தகிரி**: ஜெனிபர்; ஜான்சி; |**திரேஸ்புரம்**: புருசிமா; சில்வெஸ்டர்; |**ஆம்பூர்**: கிரிஜா சத்தியா; ரூபி மனோகரன்; |**புளியங்குடி**: ஜெப ஞானம்; சுந்தரி; |**கொட்டிவாக்கம்**: அமுதவல்லி; எஸ்தர் விஜயராணி;|**டெலானிபூர்**: ஜெயந்தி; விஜய்; |**நெல்வாய்**: அருள் எபிநேசர்; பாலகிரிதரன்; | **மதுராந்தகம்**: மலர்கொடி; சரண்யா; |**இறச்சகுளம்** : எஸ்தர்; ஜெஸ்மின்; |**வில்லிவாக்கம்**: சுந்தரி; ஜாஸ்மின்; |**சுரண்டை**: ஜீனா; ஜெயமேரி; |**ஈரோடு**: ஜான் வெஸ்லி; வில்லியம் ஹேரி; **வெப்பம்பட்டு**: ஜோஸ்மேரி; ஆர்த்தி; |**ஆற்காடு**: கதியோன் பிரபு; எப்சிபா ஜான்; |**கள்ளக்குறிச்சி**: பத்மாவதி அன்பு; எப்சிபா; | **மேல அனுப்பானடி**: அனிதா; ஜெயா; | **கொத்திமங்கலம்**: உமா தேவஜோதி; பால் குணசேகர்; |**விருப்பாட்சிபுரம்**: செல்வநாயகம்; சரோஜினி தேவி; |**நாகமலை**: விஜிலா; ஆனந்தி; |**திருச்சி**: ஷீலா; வசந்தி முத்து; | **இளையரசனேந்தல்**: மெர்ஸி; ஜோன் ஆப் ஆர்க்; |**விளாங்குறிச்சி**: கிறிஸ்டினா ரகுநாத்; | **குனியமுத்தூர்**: தனபாக்கியம்; |**கடலையூர்**: ஆபிரகாம் எஸ்தர்; |**கம்மாபட்டி**: சிவரஞ்சினி; |**கல்லல்**: அபிஷாக்; |**ஆலடிப்பட்டி**: மாதவி; |**ஆழ்வார்குறிச்சி**: ஹறிலீலா; |**உசிலம்பட்டி**: லீலாபாய்; |**காட்டூர்**: மெர்சி சாமுவேல்; |**வெள்ளக்கால்**: கலா சுரேஷ்; |**நாசரேத்**: மெர்சி; |**கவுண்டம்பாளையம்**: இந்திராணி; |**நாகப்பட்டினம்**: வின்சென்ட் ராஜ்; கவிதா; | **ராணிபேட்டை**: பிரியங்கா மகேஷ்; |**மூக்குப்பேறி**: செல்லத்தாய் ராணி; |**விருதுநகர்**: பிளாரன்ஸ்; **ஆளந்தூர்**: ஷீலா பிரான்ஸிஸ்; **திருவண்ணாமலை**: மல்லிகா; |**வேலூர்**: உஷா; |**ஓசூர்**: அனிதா; ஜெமிந்தா; |**தென்காசி**: பாலு; |**அச்சிறுப்பாக்கம்**: தமிழ்ச்செல்வி; |**மாம்பாக்கம்**:அன்னபூரணி ஜோசப்; |**அகஸ்தியர்பட்டி**: நிர்மலா; |**கொங்கந்தான்பாறை**: மேரி பொன்னுத்தாய்; **திருநெல்வேலி**: சுகுணா ரூபி; |**இராமன் புதூர்**: லீதியாள்; |**திருநின்றவூர்**: கேத்ரின்; |**சமாதானபுரம்**: எப்சிபா; |**அழ்வார்திருநகரி**: பனிமலர்; |**திசையன்விளை** : செல்வபாக்கியம்; |**பெருங்குளம்**: பியூலா ஜோபாய்; |**கட்டபெட்டு**: புஸ்பமாலா; |**மோரை**: சந்திரா; |**அரசூர்**: ரோஸ்லின் சாந்தி; |**நெய்யூர்**: ஷீலா ராபர்ட்; | **குற்றாலம்**: வேளாங்கனி; |**சாத்தூர்**: சரோஜா; |**விழுப்புரம்**: வசந்தா; |**ஆலங்காயம்**: கவிதா கிருபாவதி; |**சக்திநகர்**: ரோஸ்லின்; |**நாவலூர் குட்டபெட்டு**: பிரதீபா; |**காசிமேஜர்புரம்**: ரூத் செல்வராஜ்; |**வளசரவாக்கம்** : ஜெபசெல்வி; |**தஞ்சாவூர்**: தேவகுமார்; |**தாம்பரம்**: கண்மணி; |**கெட்டி**: சார்லஸ்; |**களக்காடு**: விமலா டேனியல்; |**திண்டிவனம்**: சாராள் அறிவுச்செல்வி; |**வடமதுரை**: லிசா கெத்சியாள்; |**குரோம்பேட்டை**: கோமதி குமார்; |**உக்கிரன்கோட்டை**: குழந்தை திரசம்மாள்; |**திருநின்றவூர்**: ரோஸ்லின் மேரி; ரூத்; எழிலரசி; தெரசா; எஸ்தர் பவானி; ஆனி; சுகந்தி; |**ஆறுமுகநேரி**: நிவேதா; ஜோதிமீனா; பனிமலர்; கிரனாப்; சிவகாமி எஸ்தர்; அன்ஸிரத்னம்; லோசினி சௌந்தர்; பாக்கியா; வெண்ணிலா எஸ்தர்; திருமணிச்செல்வி; ஜூலியட்.

## பரிபூரண ஜீவன் போட்டி எண்-18
## யோபு 11-42 அதிகாரங்கள் (இருப்பிடத்துடன் விடை எழுதவும்)

1. --------- தாமே உமக்கு பசும்பொன்னும் உமக்கு சொக்க வெள்ளியுமாயிருப்பார்.
2. --------- எங்கேயோ அங்கு --------- சேரும்.
3. சர்வ வல்லவருடைய --------- எனக்கு உயிர்கொடுத்தது.
4. கர்த்தர் யோபின் --------- பார்க்கிலும் அவன் --------- ஆசீர்வதித்தார்.
5. தங்கள் எண்ணத்தில் --------- எவர்களையும் அவர் மதிக்கமாட்டார்.
6. உங்கள் --------- சேற்றுக் குவியல்களுக்குச் சமானம்.
7. பெரியோரெல்லாம் --------- முதியோரெல்லாம் --------- அறிந்தவர்களுமல்ல.
8. --------- வாங்கினவர்களின் கூடாரங்களை --------- பட்சிக்கும்.
9. எலும்புகளில் --------- புஷ்டியாயிருக்கிறது.
10. நான் --------- சகோதரனும் --------- தோழனுமானேன்.
11. என் --------- என்னை மறந்துவிட்டார்கள்.
12. எனக்கு சாட்சி பகருகிறவர் --------- இருக்கிறார்.
13. இருப்பை --------- வெண்கலத்தை --------- எண்ணும்.
14. என் --------- எனக்குச் சால்வையும் பாகையுமாய் இருந்தது.
15. --------- தூண்டிலினால் பிடிக்கக்கூடுமோ?
16. மனுஷன் --------- திரும்புவான்.
17. நீ மிருகங்களைக் கேட்டுப்பார். அவைகள் உனக்குப் ---------
18. மாயக்காரனின் --------- ஒரு நிமிஷம் மாத்திரம் நிற்கும்.
19. பாதாளமானது --------- பட்சிக்கும்.
20. --------- பார்த்து நீங்கள் எனக்குத் --------- எனக்கு--------- என்கிறேன்.
21. தண்ணீர் --------- குடையும்.
22. --------- ஞானத்தின் விலை உயர்ந்தது.
23. தேவன் தந்த ஆவி என் --------- இருக்கும்.
24. வாய்ச்சாலகன் --------- விளங்குவானோ?
25. துன்மார்க்கனுடைய --------- அணைந்துபோம்.

---

குறிப்பு: விடையை புத்தகத்தில் எழுதி அனுப்பாமல் தனியாக பேப்பரில் எழுதி அனுப்பவும்

---

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.8.2026



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## போதகர்கள் துணைவியர் கூடுகை, பூண்டி










## பெண்கள் முகாம், புதுச்சேரி தெற்கு மண்டலம்













Registered News Paper Regd. No. 8206 / 62

AGTBC பட்டமளிப்பு விழா-மதுரை







BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664